E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 டிசம்பர் 24 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 304 | Saturday 24, December, 2022 | 13 பக்கங்கள்

திங்களன்று விண்ணப்பித்தோருக்கு

## கடவுச்சீட்டு பெற மற்றுமொரு திகதி

### எஞ்சிய 04 நாட்களில் பெற வசதி



கடவுசீட்டு பெற்றுக் கொள்வதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை 26ஆம் திகதிக்கு நேரம் வழங்கப் பட்ட அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அந்த வாரத்தில் எஞ்சிய 04 தினங்களில் ஒரு தினம் மற்றும் நேரம் வழங்கப்படுமென குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள நிர்வாக ஆணையாளர் ஹர்ஷ அலுக்பிடிய

06

கொள்கலனில் ஹங்கேரிக்குள் நுழைய முயன்ற

## இலங்கையர் உட்பட 27 பேர் ருமேனிய எல்லையில் கைது



கொள்கலன் பாரவூர்தியொன்றுக்குள் மறைந்திருந்தவாறு ஹங்கேரிக்குள் இரகசியமாக நுழைய முயன்ற இலங்கையர் உட்பட பல நாடுகளை சேர்ந்த 27 சட்டவிரோத குடியேற்றவாசிகள் ருமேனியாவின் எல்லைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துணிகள் மற்றும் இரும்பு கம்பிகள் ஏற்றப்பட்ட இந்த கொள்கலன் பாரவூர்திகளில் மறைந்திருந்தவாறு ஹங்கேரிக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்றவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

06

## புதிய ஒமிக்ரோன் குறித்து இலங்கைக்கு எச்சரிக்கை!

### மீண்டும் முகக்கவசம் கட்டாயமாக்க யோசனை



புதிய ஒமிக்ரோன் மாறுபாடுகளினால் பாதிக்கப்பட்ட நான்கு நோயாளிகள் இந்தியாவில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என சுகாதார தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


சீனாவில் பரவி வரும் புதிய ஒமிக்ரோன் மாறுபாடுகளினால் பாதிக்கப்பட்ட நான்கு நோயாளிகள் இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதன்காரணமாக எதிர்காலத்தில் மீண்டும் முகக்கவச

06

கிறிஸ்மஸ் பண்டிகை முன்னிட்டு

## ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் சிறைக்கைதிகள் நாளை விடுதலை



கிறிஸ்மஸ் பண்டிகைக்காக ஜனாதிபதியினால் வழங்கப்படும் விசேட பொது மன்னிப்பின் கீழ் சிறைக்கைதிகள் பலரை விடுதலை செய்ய சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசியலமைப்பின் 34 ஆவது பிரிவின்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, சிறையிலுள்ள கைதிகளுக்கு இந்த சிறப்பு பொதுமன்னிப்பு வழங்கப்படுகிறது.

இதன்படி, நாளை 25 ஆம் திகதிக்குள் சிறையிலிருக்கும் கைதிகளின் தண்டனைக்காலத்தை கருத்தில் கொண்டு பொது மன்னிப்பு வழங்கவும் அபராதத் தொகையைச் செலுத்தாத சிறைத் தண்டனைக் கைதிகள் அனுபவிக்கும் தண்டனையின் மீதிப் பகுதியை இரத்து செய்யவும், 65 வயதுக்கு

06

தேவையற்ற விமர்சனங்களை தவிர்த்து நல்ல முயற்சிகளுக்கு

# அரசுக்கு ஆதரவு வழங்குவது அனைவரதும் பொறுப்பு

## குறைகளை மட்டுமே கூறுவதால் எந்த பிரயோசனமும் கிடையாது



ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என பிரிந்திராது நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவது அனைவரதும் கடமை என TPA எம்.பி வேலுகுமார் தெரிவிப்பு

அரசாங்கம் முன்வைக்கும் சாதகமான விடயங்களுக்கு ஆளும்கட்சி எதிர்க்கட்சி என்றல்லாது ஆதரவு வழங்க வேண்டும். அதன் போது மட்டுமே நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றை தேடிக்கொள்ளமுடியும். அவ்வாறில்லாது அரசாங்கத்தை மட்டும் குறைக்கூறி விமர்சனம் செய்வதால் எவ்விதத் தீர்வும் மக்களுக்கு கிடைக்கப் போவதில்லையென தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

தற்போது விமர்சனங்களை விட தீர்வுத் திட்டங்களே காலத்தின் தேவையாக உள்ளதென்றும் பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் வறுமை நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. நகரம், கிராமம் மற்றும் பெருந்தோட்ட பகுதி என பார்க்கின்ற போது, பெருந்தோட்ட பகுதிகளின் வறுமை நிலை உக்கிரம் அடைந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் விமர்சனங்களை விட தீர்வு திட்டங்களே காலத்தின் தேவையாக உள்ளன.

06



28,000 மெட்ரிக் தொன் யூரியா உரத்துடன் மற்றுமொரு கப்பல் நேற்று (23) காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

## அமைச்சுக்களின் வரம்பை திருத்தியமைக்க வர்த்தமானி

### ஜனாதிபதியினால் வெளியீடு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் பல அமைச்சுக்களின் வரம்பை திருத்தியமைக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பாதுகாப்பு அமைச்சு, பெண்கள்,சிறுவர்கள் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல், கல்வி அமைச்சு,சுகாதார அமைச்சு,விவசாய அமைச்சு மற்றும் வர்த்தக வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய அமைச்சகங்களில் உள்ள பல நிறுவனங்களை அந்த அமைச்சகங்களின் வரம்பிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

06

அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ் பிரதிநிதி:

## தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு

### – மனோ கணேசன்



அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ் பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு வழங்குவதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

7 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட அரசியலமைப்பு பேரவையில் 4 சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ள நிலையில் தலா ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் வடக்கு கிழக்கு தமிழர், முஸ்லிம்கள், இலங்கை இந்திய தமிழர்

06

Bharat Biotech's தயாரிப்புக்கு அனுமதி

## கொவிட் 19 தடுப்பூசி திட்டத்தில் நாசி வழி தடுப்பு மருந்து சேர்ப்பு

### நேற்று முதல் இந்தியாவில் அறிமுகம்



கொரோனா 19 தடுப்பூசி திட்டத்தில் நேற்று 23 ஆம் திகதி முதல் நாசி வழியான கொரோனா மருந்து சேர்க்கப்பட்டுள்ளது.

நாசி வழியான கொரோனா மருந்தின் விலை விரைவில் முடிவு செய்யப்படுமென இந்தியாவின் பாரத் பயோடெக் நிறுவனம் அறிவித்துள்ளது.

பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்த நாசி (மூக்கு) வழி கொரோனா மருந்துக்கு இந்திய மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி, நேற்று முதல் கொவிட்19 தடுப்பூசி திட்டத்தில் நாசி கொரோனா மருந்து (Bharat Biotech's booster nasal vaccine) சேர்க்கப்படுமென

06

ஷாப்டர் கொலைச் சம்பவம்:

## சகோதரர்கள் இருவரிடமும் அவசர விசாரணை



மர்மமாக முறையில் கொலை செய்யப்பட்ட ஜனசக்தி குழுமத்தின் பணிப்பாளரும் பிரபல வர்த்தகருமான தினேஷ் ஷாப்டரின் சகோதரர்கள் இருவரிடம் நேற்றுமுன்தினம் (22) கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வாக்குமூலங்களைப் பெற்றுள்ளனர்.

அதன்படி, பொல்ஹேன்கொட கிருலப்பனையில் உள்ள அலுவலகத்திற்கு அவரது சகோதரர்கள் இருவரையும் அழைத்து விசாரணை அதிகாரிகள் தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

06

## வானிலை தொடர்பில் திணைக்களம் எச்சரிக்கை!

### கடற்றொழிலாளர்களுக்கு அறிவுறுத்தல்



தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக நிலை கொண்டிருந்த குறைந்த அழுத்தப் பிரதேசம் ஒரு தாழமுக்கமாக வலுவடைந்து திருகோணமலைக்கு வடகிழக்காக 420 கிலோ மீட்டர் தூரத்தில் மையம் கொண்டுள்ளது. அது டிசம்பர் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் இலங்கையைக் கடக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

எனவே, கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் மன்னாரிலிருந்து காங்கேசந்துறை, திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட ஆழம் கூடிய

06

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தனியார் பஸ்-லொறி கோர விபத்து

### 12 பேர் கடுகாயம், ஒருவர் கவலைக்கிடம்






எல்பிட்டிய குறூப் நிருபர்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மாத்தறை நோக்கி பயணித்த பஸ்சொன்று கொள்கலன் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் தனியார் பஸ்சில் ஆன்மீக சுற்றுலா சென்ற12 பேர் காயமடைந்துள்ளதாக அதிவேக நெடுஞ்சாலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

06

லங்கா சதொச நிறுவனம்

## பருப்பு, சீனி, டின்மீன், கிழங்கு உட்பட 07 பொருட்களின் விலைகள் குறைப்பு



நத்தார் பண்டிகையை முன்னிட்டு லங்கா சதொச மீண்டும் ஏழு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை விடுத்துள்ள லங்கா சதொச, இந்த விலைக் குறைப்புக்கள் நேற்று (23) முதல் அமுலுக்கு வருவதாகவும் அறிவித்துள்ளது.

லங்கா சதொசவின் இந்த அறிவித்தலின்படி பெரிய வெங்காயம் – 5.00 ரூபாவால் குறைக்கப்பட்டு ஒரு கிலோ 185.00 ரூபாவுக்கும்,

06

சீஷெல்ஸ் செல்வதாக பதிவு செய்துவிட்டு

## சுற்றுலா விசாவில் ஓமானுக்கு பணிப்பெண் அனுப்ப முயற்சி

### முகவர் நிலைய உரிமையாளர் கைது



சீஷெல்ஸில் பணிக்கு செல்வதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்து விட்டு, பெண் ஒருவரை சுற்றுலா விசாவில் ஓமானுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக அழைத்துச் செல்ல முயன்ற முகவர் நிறுவனத்தின் உரிமையாளரை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். மேலும், சம்பந்தப்பட்ட முகவர் நிலையத்தின் அனுமதிப் பத்திரத்தை

06

## இந்திய பாராளுமன்றில் மீண்டும் முகக்கவசம் அணிந்த எம்.பி.க்கள்



இந்திய பாராளுமன்றத்தின் கீழவையான லோக்சபா சபாநாயகர் ஓம் பிர்லா, எம்.பி.க்கள் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

சீனாவில் பரவி வரும் பிஎப் 7 கொரோனா தொற்று குஜராத், ஒடிசா மாநிலங்களில் மொத்தம்

06

நுரைச்சோலை அனல் மின்நிலைய

## இயந்திரங்களில் ஒன்றை மூடுவதற்கு தீர்மானம்



நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இயந்திரங்களில் ஒன்றை இன்று முதல் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி கையிருப்புக்களை நிர்வகிப்பதற்கும் திட்டமிடப்பட்ட பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக இந்த பிரிவை மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதனூடாக, இழக்கப்படும் மின்சாரத்தை ஏனைய முறைகளின் ஊடாக நிர்வகிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தற்போதைய

06

## சிறையிலிருந்த வசந்த முதலிகே வைத்தியசாலையில் அனுமதி



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே நேற்று (23) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக சிறைச்சாலைகள் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வசந்த முதலிகே, ஒகஸ்ட் 19ஆம் திகதி பொலிஸாரால் கைது

06

ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த

## தபால் பொதிகளில் ரூ.16 கோடி போதைப்பொருள் கண்டுபிடிப்பு








ஐரோப்பிய நாடுகளிலிருந்து தபால் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட சந்தேகத்துக்கிடமான பொம்மைகள் கொண்ட பொதிகள் மற்றும் உணவுகள் அடங்கிய ரின்களில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 16 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருள்

06

## சீனாவில் இலங்கை தூதரக பணியாளர்களுக்கு கொவிட்

### 22 ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்




பீய்ஜிங்கிலுள்ள இலங்கை தூதரகத்தின் 22 ஊழியர்கள் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரோன் BF.7 மாறுபாட்டால், சீனாவில் கோவிட் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 'இந்தநிலையில், தூதரகத்தில் உள்ள உள்ளூர்வாசிகள் உட்பட அனைத்து இலங்கை ஊழியர்களும் மிதமான மற்றும் லேசான அறிகுறிகளுடன் கொவிட் தொற்றினால்

06

# சர்வதேச செய்திகள்

## இந்தியாவில் கொரோனா கட்டுப்பாட்டுக்குத் திட்டம்



இந்திய அதிகாரிகள் புதிதாக கொவிட்–19 கட்டுப்பாடுகள் விதிப்பது பற்றிப் பரிசீலித்து வருகின்றனர்.

இந்தியாவில் குறைந்தது நால்வருக்கு ஒமிக்ரோன் பி.எப்.7 ரக வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. சீனாவில் அதிகரித்து வரும் நோய்ப்பரவலுக்கு அந்த ரக வைரஸே காரணம் என்று நம்பப்படுகிறது.

இந்தியா செல்லும் பயணிகளில் சுமார் 2 வீதத்தினருக்கு விமான நிலையங்களில் பரிசோதனை நடத்தப்படுகிறது. கிறிஸ்மஸ், புத்தாண்டு விழாக் காலத்தில் நோய்ப்பரவலைத் தடுக்க அதிகாரிகள் புதிய கட்டுப்பாடுகளை அறிவிக்கக்கூடும்.

கூட்டமான இடங்களுக்குச் செல்லும்போது மக்கள் முகக்கவசம் அணிந்து கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொது இடங்களில் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும் என்ற விதியை அரசாங்கம் மீண்டும் நடைமுறைப்படுத்தலாம் என்று தெரிகிறது.

நோய்ப்பரவல் முறியடிப்பு நடவடிக்கைகள் பற்றி முடிவெடுக்க உயர் அதிகாரிகளுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை நடத்தியுள்ளார்.

## அமெரிக்காவில் தலைமுறை காணாத பயங்கர பனிப்புயல்

### பயணங்களுக்குப் பாதிப்பு



தலைமுறை காணாத பனிப்புயல் காரணமாக அமெரிக்காவில் வெப்பநிலை மைனஸ் 40 டிகிரி செல்சியஸ் வரை வீழ்ச்சி கண்டிருப்பதோடு இதனால் ஆயிரத்துக்கும் அதிகமான விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டு நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இந்த சூழலில் கிறிஸ்மஸ் பயணங்களும் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளன.

கடும் பனிப்பொழிவு மற்றும் அலறல் ஒலியை எழுப்பக்கூடிய காற்று ஆண்டின் பரபரப்பான விடுமுறை காலத்தை ஸ்தம்பிக்கச் செய்துள்ளது. ஆர்டிக்கில் இருந்து வீசும் குளிர் காற்றே அமெரிக்கா மற்றும் கனடாவில் உறையும் காலநிலையை உருவாக்கியுள்ளது.

இந்த பனிப்புயல் குறித்து காலநிலை அவதானிப்பு நிலையம் மில்லியன் கணக்கான மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. வெளியே செல்வோர் சில நிமிடங்களுக்குள் உறையும் நிலைக்கு முகம்கொடுக்கக் கூடும் என்று அந்த எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. “நீங்கள் சிறுவராக இருந்தபோது இருந்த பனிக் காலம் அல்ல இது. இது மிகத் தீவிரமானது” என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

100 மில்லியனுக்கும் அதிக மானவர்கள் தமது வீதிப் பயணங்களை ஆரம்பிக்க திட்டமிட்டிருக்கும் நிலையில் அங்கு எதிர்படுபவற்றை மறைக்கும் வீதிகள் ஆபத்தான நிலையில் இருப்பதாக அமெரிக்க வாகனப் போக்குவரத்து சங்கம் எச்சரித்துள்ளது.

நாட்டின் வடக்கை நோக்கிச் செல்லும் பிரதான நெடுஞ்சாலை தெற்கு டகோடாவில் இருந்து மூடப்பட்டுள்ளது. “போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வீதியில் இடையூறை அகற்றும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்” என்று தெற்கு டகோமா போக்குவரத்துத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

“பல அதிவேகப் பாதைகளும் தற்போது பயணிக்க முடியாதவையாக மாறியுள்ளன. பனி நிரம்பியருப்பது மற்றும் சறுக்கும் தன்மை காரணமாக வீதிகளில் பயணிப்பது முடியாத ஒன்றாகியுள்ளது” என்று அது குறிப்பிட்டுள்ளது.

மறுபுறம் கடந்த வியாழனன்று 22,000க்கும் அதிகமான விமானப் பயணங்கள் தாமதித்திருப்பதோடு 5,500 விமானப் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

## சிரியாவுக்கு இந்தியா உதவி



மின் உற்பத்தி நிலையம் மற்றும் உருக்கு ஆலை ஒன்றை அமைப்பதற்காக சிரியாவுக்கு 280 மில்லியன் டொலர் கடனுதவி வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

ஐ.நா பாதுகாப்புச் சபையில் உரையாற்றிய இந்தியாவின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ருச்சிரா கம்போஜ் இதனைத் தெரிவித்தார். இந்தியாவில் கல்வி கற்பதற்கு 1500 சிரிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரு தரப்பு மற்றும் பல தரப்பு வழிகளில் சிரியாவுக்கு மனிதாபிமான, தொழில்நுட்ப மற்றும் அபிவிருத்தி உதவிகளை இந்தியா தொடர்ந்து வழங்கி வருவதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

## சீனாவில் தினசரி ஒரு மில். பேருக்கு கொவிட் தொற்று



சீனா மிக மோசமான கொவிட்–19 வைரஸ் பரவலை எதிர்கொள்ளும் நிலையில் உள்ளது. 3 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட அது பெரிய அளவில் மிகக் கடுமையாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

நாள்தோறும் சீனாவில் புதிதாக ஒரு மில்லியன் பேருக்கு நோய்த் தொற்று கண்டறியப்படுவதாக மதிப்பிடப்படுகிறது. அன்றாடம் சுமார் 5,000 பேர் உயிரிழக்கின்றதாக கூறப்படுகிறது.

நோய்ப்பரவல் ஆரம்பித்ததில் இருந்து அதைக் கண்காணித்து வரும் எயார்பினிட்டி ஆய்வு நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

வைரஸ் பரவலை முற்றாகத் துடைத்தொழிக்க சீனா மும்முரமாக இறங்கியது. ஆனால் அதற்கு எதிர்ப்புக் கிளம்பவே, கட்டுப்பாடுகளை இந்த மாத ஆரம்பத்தில் படிப்படியாகத் தளர்த்தியது.

அதைச் சமாளிக்க அங்குள்ள சுகாதாரக் கட்டமைப்பு தயாராக இல்லை.

சீனாவின் மருத்துவ ஊழியர்கள் நோய்ப்பரவலை முறியடிக்கும் ஒரு போருக்குத் தயாராகி வருவதாக நிறுவனம் கூறியது.

## ஜப்பான் தூதுவர் நம்பிக்கை



ஜப்பான் – இந்திய புல்லட் ரயில் திட்டம் நிறைவடையும்போது அதிவேக ரயில் புரட்சியை ஏற்படுத்தும் என்று இந்தியாவுக்கான ஜப்பான் தூதுவர் ஹிரோஷி சுசுக்கி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த அதிவேக ரயில் திட்டத்திற்காக இந்தியா மற்றும் ஜப்பான் ஊழியர்கள் ஓர் அணியாக உற்சாகத்துடன் செயற்படுவதை அவர் வரவேற்றுள்ளார். மும்பை – அஹமதாபாத் அதிவேக ரயில் திட்டத்திற்கு ஜப்பான் அரசு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விண்கலத்தில் கசிவு: விண்வெளி வீரர்களை மீட்டு வர நடவடிக்கை



சொயுஸ் விண்கலத்தில் கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து மீட்பு நடவடிக்கையாக மூன்று விண்வெளி வீரர்களை முன்கூட்டியே அழைத்துவர ரஷ்ய விண்வெளி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

விண்கலத்தின் வெளிப்புற ரேடியேட்டரில் சிறிய துளை ஏற்பட்டது எவ்வாறு என்பது தெரியவில்லை என்று நாசா மற்றும் ரஷ்யாவின் அரச விண்வெளி நிறுவனம் கடந்த வியாழக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளது.

எனினும் விண்கல் தாக்கியே இந்தத் துளை ஏற்பட்டது என்ற கூற்றை அந்த நிறுவனங்கள் மறுத்தன.

இரண்டு விண்வெளி வீரர்கள் வழக்கமான விண்வெளி நடைப்பயணத்திற்கு தயாரான நிலையிலேயே இந்தக் கசிவு ஆரம்பித்துள்ளது.


இந்நிலையில் இந்த மூன்று விண்வெளி வீரர்களையும் பூமிக்கு எவ்வாறு அழைத்து வருவது என்பது பற்றிய முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. இவர்களை அழைத்துவர மற்றொரு சொயுஸ் விண்கலம் அனுப்பப்பட வாய்ப்பு அதிகம் உள்ளது. இந்த கசிவுக்கு உள்ளான விண்கலத்தின் குளிர்விப்பான் முழுமையாக செயல்படாத நிலையில் விண்வெளி வீரர்கள் அதில் பூமிக்குத் திரும்ப குறைவான சாத்தியமே உள்ளது. இந்த விண்கலத்தில் வெப்பநிலை தற்போது அதிகரித்து வருகிறது.

எனினும் அங்குள்ள விண்வெளி வீரர்களுக்கு ஆபத்து இல்லை என்று நாசா தெரிவித்துள்ளது.

எம்.எஸ்.–22 என்ற இந்த வாகனத்தில் ட்மிட்ரி பெடலின் மற்றும் செர்கி ப்ரொகோபிவ் ஆகிய இரு ரஷ்ய விண்வெளி வீரர்கள் மற்றும் பிரான்க் ருபியோ என்ற நாசா விண்வெளி வீரர் ஆகியோர் கடந்த செப்டெம்பரில் விண்வெளிக்குச் சென்றனர்.

பூமியின் சுற்றுவட்டப்பாதையில் தற்போது ஏழு விண்வெளி வீரர்கள் உள்ளனர். இதில் எம்.எஸ்.–22 விண்கலம் விண்வெளி வீரர்கள் தங்குவதற்கு தகுதியற்றதாக மாறினால் சர்வதேச விண்வெளி நிலையத்தில் விண்வெளி வீரர்கள் தங்குவதற்கு ஒரு உயிர்காப்பு விண்கலம் மாத்திரமே எஞ்சியிருக்கும். அங்கு நான்கு பேர் மாத்திரமே தங்க முடியும் என்ற நிலையில் எஞ்சியவர்கள் வெளியேற்றப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

## ஆஸி.–இந்தியா கூட்டுப் பயிற்சி



அவுஸ்திரேலியா மற்றும் இந்தியாவுக்கு இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சி ராஜஸ்தானிலுள்ள மஹாஜன் கள துப்பாக்கி பயிற்சி பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இதில் அவுஸ்திரேலிய இராணுவத்தின் இரண்டாவது பிரிவின் 13ஆவது படைப்பிரிவு வீரர்களும் இந்திய இராணுவத்தின் டொக்ரா படைப்பிரிவின் வீரர்களும் பங்குபற்றியுள்ளனர். சாதகமான இராணுவ உறவுகளைக் கட்டியெழுப்பும் நோக்கமாக இந்த பயிற்சி இடம்பெற்றதாக கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கா பயணித்த

## செலென்ஸ்கியிடம் அமைதி குரலைக் கேட்கவே இல்லை



உக்ரைனில் அமெரிக்கா மறைமுகப் போரில் ஈடுபட்டிருப்பதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கிக்கு ஆதரவளிப்பதன் மூலம் அமெரிக்கா அவ்வாறு செய்வதாக அது குறிப்பிட்டது.

வொஷிங்டன் சென்றுள்ள உக்ரைன் ஜனாதிபதிக்கு 1.8 பில்லியன் டொலர் இராணுவ உதவி வழங்க அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

இது தூண்டுதல் நடவடிக்கை என்றும், கடுமையான பின்விளைவுகளுக்கு இட்டுச் செல்லும் என்றும் அமெரிக்காவுக்கான ரஷ்யத் தூதர் அனாட்டோலி அன்டோனோவ் கூறினார். எல்லாத் தரப்பும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று ரஷ்யா வேண்டுகோள் விடுத்து வரும் நிலையில், அமெரிக்கா மற்றும் உக்ரைனுக்கு ஏவுகணைத் தற்காப்பு முறையைக் கொடுக்கவிருப்பது மிகுந்த கவலையளிப்பதாக அவர் கூறினார்.

செலென்ஸ்கியின் பயணத்தில் அமைதிக்கான குரல் கேட்கவே இல்லை என்று ரஷ்யா கூறியது. அமெரிக்கா ரஷ்யாவுடன் மறைமுகப் போரில் ஈடுபட்டுள்ளது என்பதற்கு அதுவே சான்று என கிரெம்ளின் பேச்சாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறினார்.

## ஜப்பானில் 40 ஆண்டுகளில் இல்லாத அளவு பணவீக்கம்



ஜப்பானில் 1981க்குப் பின்னர் அதிகபட்சமாக நுகர்வோர் விலை பணவீக்கம் கடந்த நவம்பரில் 3.7 வீதமாக அதிகரித்துள்ளது.

இதில் பதப்படுத்தும் உணவுப் பொருட்கள், மின்சாரம் மற்றும் வளிச்சீராக்கி போன்ற நீடித்த பொருட்களின் விலைகளே அதிகரித்துள்ளன.

இது அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஏனைய இடங்களில் உள்ள நுகர்வோரை தாக்கும் உச்ச பணவீக்கத்தை விட குறைவாக இருந்தாலும், விலை அதிகரிப்பானது ஜப்பான் வங்கியின் நீண்ட கால இலக்கான 2 வீத பணவீக்கத்தை விட அதிகமாக உள்ளது.

1990களில் இருந்து, ஜப்பான் மந்தமான பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் காலகட்டங்களுக்கு இடையில் ஊசலாடி வருகிறது.

உலகளாவிய பொருளாதார மந்தநிலை அபாயங்கள் மற்றும் அதிக இறக்குமதி செலவுகள், நுகர்வு மற்றும் வணிகங்களின் மீது தாக்கம் செலுத்துவதால் ஜப்பானின் பொருளாதாரம் எதிர்பாராத விதமாக மூன்றாவது காலாண்டில் 0.8 வீதம் சுருங்கியமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலை தடைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பலர் கைது



ஆப்கானில் பெண்கள் பல்கலைக் கழகம் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பல பெண்களை தலிபான்கள் கைது செய்துள்ளனர்.

இதன்போது மூன்று ஊடகவியலாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். டகார் மாகாணத்திலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருப்பதாக தெரியவருகிறது.

இந்தத் தடை அறிவிக்கப்பட்டு அடுத்த நாளான கடந்த புதனன்று நூற்றுக்கணக்கான பெண்கள் பல்கலைக்கழகம் நுழைவதை காவலர்கள் தடுத்தனர்.

தலிபான்கள் கடந்த ஆண்டு ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து பெண்கள் கல்வி மீது விதித்து வரும் கட்டுப்பாடுகளின் தொடர்ச்சியாகவே இந்தத் தடை உள்ளது.

இந்நிலையில் கடந்த வியாழனன்று காபுல் வீதிகளில் ஹிஜாப் அணிந்த பல டஜன் பெண்கள் இந்தத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோசங்களை எழுப்பியும் பதாகைகளை ஏந்தியும் பேரணி செல்லும் காட்சி சமூக ஊடகத்தில் வெளியானது.

இதன்போது பெண் தலிபான் அதிகாரிகளால் தாம் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டதாக பல பெண்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
2022 டிசம்பர் 24 சனிக்கிழமை




**தொழுகை நேரம்**
22 முதல் 25 வரை
சுபஹ் - 04.56
லுஹர் - 12.11
அஸர் - 03.32
மஃரிப் - 06.02
இஷா - 07.17

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் மார்கழி 9
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)





இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு இந்தியாவினால் 125 நவீன ரக பொலிஸ் ஜீப் வண்டிகள் வழங்கப்பட்டன. இந்தியாவிடமிருந்து 500 ஜீப் வண்டிகள் வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது. 100 மில்லியன் டொலர் கடன் திட்டத்தின் கீழ் முதற்தொகுதியாக இவை கையளிக்கப்பட்டன. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவினால், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன ஆகியோரிடம்(22) கையளிக்கப்பட்டன.

மலையக மக்களின் பங்களிப்பை

## கௌரவிக்கும் நிகழ்வுக்கு அமைச்சரவை அனுமதி

மலையக தமிழ் மக்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழங்கி வரும் பங்களிப்பை கௌரவித்து விசேட நிகழ்ச்சிகளை நடத்த ஜனாதிபதி முன்வைத்த கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

200 ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு மலையக தமிழ் மக்கள் ஆற்றிய பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் தொடர் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருந்த கோரிக்கைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பெருந்தோட்டத்தின் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கிய மலையக தமிழ் சமூகத்தின் முதலாவது குழு இலங்கைக்கு வந்து இருநூறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதனை நினைவுகூரும் வகையில் 2023 பெப்ரவரியில் தொடர் நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக ஜனாதிபதி கோரிக்கை முன்வைத்திருந்தார்.

இதற்கமைய, 200 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு புலம்பெயர்ந்த மலையகத் தமிழர்களின் சேவைகளை கௌரவித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பெருந்தோட்ட அமைச்சும் அதனுடன் தொடர்புடைய ஏனைய அரச நிறுவனங்களும் இணைந்து இதற்கான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1,50,000 க்கும் மேற்பட்ட மலையக தமிழ் தோட்ட தொழிலாளர்கள் முக்கியமாக மத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் கலாசாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

O/L, A/L சித்தியடையாத மாணவர்களுக்கு

## தகவல் தொழில்நுட்ப துறையை தொடர்வதற்கு அரசாங்கம் வாய்ப்பு

### தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவிப்பு



க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத் துறையை தொடருவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெஹியோவிற்ற படங்கல இளைஞர் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமான LIGHTING DIGITAL தகவல் தொழிநுட்ப பயிற்சி முகாமின் மாணவர்களுடனான சந்திப்பின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்....

2023ஆம் ஆண்டு இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் ஆண்டாக இருக்கும். இதற்காக இளைஞர், யுவதிகளை இந்தத் துறையில் இணைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தகவல் தொழிநுட்பத் துறையைச் சேர்ந்த பலர் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். எனவே அந்த இடைவெளியை நிரப்புவது அவசியமானது. க.பொ.த சாதாரண தர அல்லது உயர்தரத்தில் தேர்ச்சியடையாத மாணவர்களை இத்துறைக்குள் உள்வாங்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

டிஜிட்டல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே ஜனாதிபதியின் இலக்கு. தகவல் தொழில்நுட்பத்துறையில் முழுமையான அறிவைக் கொண்ட நிபுணர்களை உருவாக்குவதன் ஊடாகவே இதனை வெற்றி கொள்ள முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

மேலும், சாதாரண தரம் அல்லது உயர் தரம் என்பது வெறும் சான்றிதழ் மட்டுமே. ஆனால் அந்தத் தேர்வில் தேர்ச்சியடையாத பெரும்பாலான மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் அதிக திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். நீங்கள் இந்தப் பரீட்சைகளில் தேர்ச்சியடையவில்லை என்றால், வாழ்க்கையில் நம்பிக்கையை இழக்க வேண்டிய அவசியமில்லை.

இன்று சர்வதேச மட்டத்தில் மென்பொருள் அமைப்புகளை உருவாக்குவதில் இலங்கை மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். தற்போது தகவல்

06

## கொழும்பு, புதுச் செட்டித்தெரு சாயி நிலையத்தில் நத்தார் பஜன்

கொழும்பு, ஸ்ரீ சத்யசாயி பாபா மத்திய நிலையத்தில் வருடாந்தம் நடைபெற்றுவரும் நத்தார் சாயி பஜன் நிகழ்வு, இன்று 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை 05 மணிக்கு புதுச்செட்டித்தெருவிலுள்ள சாயி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சாயி பஜனையுடன் நத்தார் கீதம்,வியாகுல மாதா தேவாலயத்தின் திருத்தந்தையின் நத்தார் ஆசிச்செய்தியுடன்,மெழுகுவாத்தி ஒளிருடன் நத்தார் பாடல்கள், நத்தார் தாத்தாவின் வருகை போன்ற நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## ஏலக்காய் ஒரு கிலோ ரூ.14000ஆக அதிகரிப்பு

தற்போது சந்தையில் ஒரு கிலோ ஏலக்காய் விலை 12000 ரூபா முதல் 14000 ரூபா வரை அதிகரித்துள்ளது.

நாட்டில் பயிரிடப்படும் ஏலக்காயின் அளவு குறைந்துள்ளதே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

ஒரு கிலோ உலர் ஏலக்காயை பதப்படுத்த சுமார் ஆறு கிலோ பச்சை ஏலக்காய் தேவைப்படுவதுடன், சந்தையில் ஒரு கிலோ பச்சை ஏலக்காயின் விலை தற்போது 7000 ரூபா முதல் 8000 ரூபா வரை அதிகரித்துள்ளது.

மேலும், இந்நாட்டில் வருடாந்தம் சுமார் 30 மெட்ரிக் தொன் ஏலக்காய் நுகரப்படுகிறது.

தற்போது உற்பத்தி குறைந்துள்ளதால், ஏலக்காய் உற்பத்திக்கு அதிக கேள்வியும் தேவையும் ஏற்பட்டுள்ளதாக, ஏலக்காய் விவசாயிகள் கூறுகின்றனர்.

## 2024 A/L தகுதியுள்ளோருக்கு புலமைப்பரிசில் வழங்கல்

### விண்ணப்ப திகதி நீடிப்பு

President fund for Advanced Level Students

உயர்தர மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து புலமைப் பரிசில்கள் வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

2021(2022) ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றி 2024 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரத்துக்கு தோற்ற தகுதி பெற்றுள்ள பொருளாதார நெருக்கடிக்குள்ளான மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திடமிருந்து புலமைப்பரிசில் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது. இதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதியை 2022 டிசம்பர் 30 வரை நீடிப்பதற்கு ஜனாதிபதி செயலகம் தீர்மானித்துள்ளது.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி ஏற்கனவே நேற்று 23 என அறிவிக்கப்பட்டிருந்தாலும் பெற்றோரும் மாணவர்களும் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோள்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய புலமைப்பரிசிலுக்காக விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் அதற்கான விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்து 2022.12.30 ஆம் திகதிக்கு முன்னர் தாம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலையின் அதிபரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

2022.12.23 ஆம் திகதி தொடக்கம் 2023.01.02 ஆம் திகதி வரையான காலப்பகுதி பாடசாலை விடுமுறை ஆகையால் இதற்காக பாடசாலை அலுவலகங்களை திறந்து வைக்கும்படியும் மாணவர்களால் கொண்டுவரப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி நிதியம் கல்வியமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி 2022.12.30 வரை நீடிக்கப்பட்டுள்ளதே தவிர, விண்ணப்பதாரிகளை

06

## யாழ். இந்திய துணைத் தூதருடன் அங்கஜன் இராமநாதன் சந்திப்பு



**சாவகச்சேரி விஷேட நிருபர்**

யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனுக்கும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், அங்கஜன் இராமநாதனுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று (23) அங்கஜன் இராமநாதனின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது, வடமாகாண மக்கள் எதிர்கொள்ளும் தற்கால பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்த அங்கஜன் இராமநாதன் இந்திய அரசு எமது மக்களுக்கு ஆற்றிவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

நாட்டின் வறுமை மிகுந்த மாவட்டங்களில் யாழ்.

06

## ஜோன் கொத்தலாவல பல்கலை வேந்தராக ஜெனரல் கோட்டேகொட

### ஜனாதிபதியால் பரிந்துரை

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் வேந்தராக ஜெனரல் (ஓய்வுபெற்ற) எஸ்.எச்.எஸ் கோட்டேகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் வேந்தராக ஓய்வு பெற்ற ஜெனரல் எஸ்.எச்.எஸ் கோட்டேகொடவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 1981 ஆம் ஆண்டுக்கான 68 ஆம் இலக்க சட்டத்தின் 7பி(1) சரத்துக்கமையவே (திருத்தப்பட்டது) ஜனாதிபதி இந்த நியமனத்தை செய்துள்ளார்.

இவர் 2023 முதல் ஐந்தாண்டு காலப்பகுதிக்காக இப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினகரன் இணையாசிரியர் மர்லினின் தாயார் காலமானார்

**எம். எஸ். முஸப்பிர்**

தினகரன் இணை ஆசிரியரான மர்லின் மரிக்காரின் அன்பு தாயார் நெய்னா முகம்மது ஹுசைமா பீவி நேற்று வெள்ளிக்கிழமை மாலை புத்தளம் விருதோடையில் தனது 71 வது வயதில் காலமானார்.

அண்ணார் ஓய்வு பெற்ற ஆசிரியர் நாகூர் பிச்சை முத்துமாரி காரின் அன்பு மனைவியும், தினகரன் இணை ஆசிரியர் மர்லின் மரிக்கார், மக்கீன் மரிக்கார், பாத்திமா ரிஸானா, பாத்திமா சப்ரினா ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்.

அன்னாரின் ஜனாஸா இன்று சனிக்கிழமை புத்தளம் விருதோடை முஸ்லிம் மையவாடியில் இடம் பெற உள்ளது.

## சமூக சேவையாளர்கள் கௌரவிப்பு

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வி.பி. கணேசனின் ஞாபகார்த்தமாக அண்மையில் பொற்மணிச் செம்மல் விருது வழங்கி சமூக சேவையாளர்கள், கிராம சேவையாளர்கள் சிலர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

## காரைக்கால் – யாழ் படகு சேவை ஜனவரியில் தொடங்க முடியாது

### சோதனை நிலைய பணியால் காலதாமதம்

புதுச்சேரி பிராந்தியமான காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு படகு சேவை அடுத்தமாதம் தொடங்காது. சோதனை நிலையப் பணிகள் நடப்பதால் இரு மாதங்களாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்தியர்கள் அதிகளவில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் வசதிக்காக இந்தியாவின் யூனியன் பிரதேசமான புதுச்சேரி பிராந்தியமான காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிகள் படகுச் சேவை அடுத்தமாதம் தொடங்கப்படஉள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. இதற்கு இந்திய அரசின் ஒப்புதலும் தரப்பட்டுள்ளது.

வரும் ஜனவரியில் படகு போக்குவரத்து தொடங்க வாய்ப்புள்ளதா என் துறைமுகத் துறை செயலர் ஜவகரிடம் கேட்டதற்கு, "படகு போக்குவரத்துக்கு மத்திய அரசிடம் ஒப்புதல் தந்துள்ளது. காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஐந்து நிறுவனங்கள் படகு போக்குவரத்தை நடத்த விண்ணப்பித்தனர். அவர்களின் பின்புலத்தை ஆராய்ந்து ஒப்புதலை மத்திய அரசு அளிக்கும். படகு சேவைக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் பயணிகள் சோதனை நிலையம் உள்ளிட்ட அனைத்து பணிகளும் நடந்து வருகிறது.

படகு சேவையை ஜனவரியில் தொடங்குவது கடினம். தற்போதைய பணிகள் நிறைவடைய இரு மாதங்களாகும். அதன்பிறகு படகு போக்குவரத்து திகதி இறுதி செய்யப்படும். வர்த்தகம் மட்டுமில்லாமல் சுற்றுலாவுக்கும் உகந்ததாக இச்சேவை இருக்கும். குறிப்பாக காரைக்கால் திருநள்ளாறு கோயில் உள்ளிட்ட ஆன்மீக சுற்றுலாவும் நன்கு வளர்ச்சி அடையும்" என்று குறிப்பிட்டார்.

படகு போக்குவரத்து தொடர்பாக அரசு வட்டாரங்களில் விசாரித்தபோது,"காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணத்தை மூன்றரை மணி நேரம் முதல் நான்கு மணி நேரத்துக்குள் சென்றடையலாம். பயணக் கட்டணம் இந்திய ரூபாய் 5 ஆயிரமாக நிர்ணயிக்க திட்டமிட்டுள்ளனர். படகு சேவையில் 300 முதல் 400 பயணிகள் பயணிக்கலாம். அத்துடன் ஒரு பயணி 100 கிலோ வரை உடமைகளை எடுத்து செல்லலாம்" என்று தெரிவிக்கின்றனர்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மார்கழி மாதம் 09ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 29

### குறள் தரும் சிந்தனை



விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்

பழகிய நட்பின் உரிமை காரணமாக தமது நண்பர் தம்மைக் கேளாமலே ஒரு செயல் புரிந்து விட்டாலும்கூட நல்ல நண்பராயிருப்பவர் அதனை ஏற்றுக் கொள்ளவே செய்வார்.

# கொவிட் தொற்று விடயத்தில் அலட்சியம் பேணுவது ஆபத்து!

உலகை மீண்டும் அச்சுறுத்தும் வகையில் சீனாவில் கொவிட் தொற்று மீண்டும் தலைதூக்கியிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. அந்நாட்டில் கொவிட் வைரஸின் திரிபான ஒமிக்ரோன் தற்போது விரைவாகப் பரவி வருவதாக அந்நாட்டுத் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது. சீனாவில் தற்போது தலைதூக்கியிருக்கும் ஒமிக்ரோன் தொற்றானது உலகை மீண்டும் அச்சத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

உலக மக்களின் இந்த அச்சம் தவிர்க்க முடியாததாகும். ஏனெனில் உலக நாடுகளில் மில்லியன்கணக்கான மக்களின் உயிரைப் பலிகொண்டுள்ள கொவிட் தொற்று முதன்முதலில் உருவெடுத்த இடம் சீனா ஆகும். அதன் பின்னரே மற்றைய நாடுகளுக்கெல்லாம் கொவிட் தொற்றானது மிக வேகமாகப் பரவி மில்லியன்கணக்கான மக்களைப் பலியெடுத்தது.

அது மாத்திரமன்றி உலகின் பொருளாதாரத்தையும் பெருவீழ்ச்சிக்கு உள்ளாக்கியது.

உலக நாடுகள் ஒவ்வொன்றையும் எடுத்துக் கொண்டால் மனித உயிர்களை மாத்திரமன்றி, பொருளாதாரம் மற்றும் பலவித துறைகளிலும் கொவிட் தொற்றானது பெருவீழ்ச்சியை ஏற்படுத்தியது. உலக நாடுகள் கொவிட் தொற்றின் பாதிப்புகளிலிருந்து இதுவரை முழுமையாக விடுபடவில்லை என்பதே உண்மை.

இவ்வாறிருக்கையில், சீனாவில் கொவிட் தொற்றின் திரிபான ஒமிக்ரோன் மிக வேகமாகப் பரவி வருவதாகத் தகவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. அந்நாட்டில் புதிய தொற்று காரணமாக ஏராளமான மனிதஉயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும், தொற்று மேலும் பரவுவதைத் தடுக்கும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அந்நாடு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவில் மீண்டும் உருவெடுத்துள்ள கொவிட் திரிபானது உலக மக்களுக்கு எச்சரிக்கையான செய்தியாகும். உலக நாடுகள் இவ்வேளையில் மிகுந்த அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டுமென்பதை இச்செய்தி எமக்கெல்லாம் உணர்த்துகின்றது. மக்கள் அக்கறையீனமாக நடந்து கொள்ளத் தலைப்பட்டார்களானால் உலகம் மீண்டுமொரு கொவிட் அலையை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும் என்கின்றனர் மருத்துவ நிபுணர்கள்.

சீனாவில் உருவெடுத்துள்ள ஒமிக்ரோன் திரிபானது இந்தியாவில் அலையொன்றைத் தோற்றுவிக்காதென்று இந்திய மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். ஏனென்றால் ஒமிக்ரோன் திரிபானது ஏற்கனவே இந்தியாவில் அலையாகத் தோற்றமெடுத்ததென்பது குறிப்பிடத்தக்கது. ஒமிக்ரோன் அலையை இந்தியா ஏற்கனவே கடந்து விட்டதனால், அந்நாட்டில் இனிமேல் ஒமிக்ரோன் அலையொன்று உருவாகுவதற்கு இடமில்லையென்று இந்திய மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனாலும் இதையெல்லாம் அலட்சியப்படுத்துவது விவேகமல்ல என்று மற்றொரு தரப்பு மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். கொவிட் திரிபு என்பது மற்றொரு திரிபாக உருவெடுப்பதற்கான ஆபத்தும் உள்ளதனால் மக்கள் சுகாதார அடிப்படைப் பழக்கவழக்கங்களை உரியபடி பேணி நடந்து கொள்ள வேண்டுமென்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இதுவிடயத்தில் இந்தியா தனது நாட்டு மக்களை ஏற்கனவே எச்சரித்துள்ளது. கூடியவரை அடிப்படை சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பேணி நடந்து கொள்ள வேண்டுமென்று தனது மக்களுக்கு இந்தியா அறிவுரை கூறியுள்ளது.

இந்தியாவின் அயல்நாடு இலங்கை ஆகும். அது மாத்திரமன்றி இந்தியாவுடன் மிகநெருக்கமான தொடர்புகளைப் பேணி வருகின்ற நாடும் இலங்கை ஆகும். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பயணத் தொடர்புகள் மிக அதிகமாகும். இலங்கை மக்கள் அந்நாட்டுக்குச் செல்வதும், இந்திய மக்கள் எமது நாட்டுக்கு வருவதும் எக்காலமும் நடந்து வருகின்ற விடயங்களாகும். எனவே இந்தியாவில் தொற்றுநோயொன்று பரவுமானால் அத்தொற்று இலங்கைக்குப் பரவுவதற்கு அதிக நாட்கள் எடுக்கப் போவதில்லை. ஆகவே இலங்கை மக்கள் மிகுந்த அவதானம் பேணுவது அவசியமாகின்றது.

எமது நாடு ஏற்கனவே கொவிட் பாதிப்பைக் கடந்து வந்துள்ளது. இலங்கையில் பல தடவைகள் கொவிட் அலைகள் தோன்றியுள்ளன. ஆயிரக்கணக்கான உயிர்களை எமது நாடு பறிகொடுத்துள்ளது. அதுமாத்திரமன்றி, பொருளாதார ரீதியில் எமது நாடு அடைந்துள்ள பாதிப்புகளும் மிகவும் அதிகம். அதேவேளை கொவிட் பாதிப்பிலிருந்து எமது நாடு மீண்டெழுந்து வந்த பின்னர் பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு எமது நாடு முகம்கொடுத்துள்ளது. பொருளாதார வீழ்ச்சியில் இருந்து எமது நாடு இன்னுமே மீண்டெழவில்லை.

இந்நிலையில் கொவிட் தொற்று இலங்கையில் மீண்டும் தலைதூக்குமானால் எமது நாடு அதனைச் சமாளித்து மீண்டெழுவதென்பது இலகுவான காரியமல்ல. பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்துள்ள நாடு கொவிட் தொற்றுக்கான பாதுகாப்பைப் பெறுவதற்கு அதிக நிதியைச் செலவிட வேண்டியிருக்கும். அதற்கான நிதி தற்போது இலங்கையிடம் கிடையாது. எனவே கொவிட் தொற்று பரவாமல் பாதுகாப்புப் பெறுவதே இலங்கை மக்கள் முன்னாலுள்ள பெரும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மட்டக்களப்பில் சோளம் பயிர்களில் படைப்புழுக்களை அழிக்க விவசாய திணைக்களம் தீவிர நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட சோளம் பயிர்களில் படைப்புழுக்கள் பரவி வருவதாக விவசாயத் திணைக்களம் கண்டறிந்துள்ளது. இதனைத் தொடர்ந்து மாவட்டத்தின்பல பகுதிகளில் சோளம் பயிர்களில் ஏற்பட்டுள்ள படைப்புழுக்களை உடனடியாக ஒழித்துக் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.எச். ஹுசைனின் வழிகாட்டுதலில் விவசாய விரிவாக்கல் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் வி பேரின்பநாயகத்தின் தலைமையிலான அதிகாரிகள் குழு இப்பொழுது இம் மாவட்டத்தில் சோளம் செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ள பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து தேவையான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்படி மாவட்ட விவசாய விரிவாக்கம் அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் வி பேரின்பநாயகத்தின் வழிகாட்டுதலில் சோளம் பயிர்கள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களுக்கு அதிகார குழு அதிகாரிகள் குழு நேரில் சென்று படைப் புழுக்களின் தாக்கங்கள் பற்றி கண்டறிவதுடன் இதனைத் தடுப்பதற்கு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி குறித்த சோளம் செய்கையாயாளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.



இது தவிர விவசாய கிராமங்களில் படைப் புழுக்களை முன்கூட்டியே தடுப்பதற்கான ஆலோசனைகள் பற்றிய கருத்தரங்களும் நடத்தப்பட்டு நடவடிக்கைகள் பற்றிய துண்டு பிரசுரங்களும் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டு வருவதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிதளவில் படைப்புழுக்கள் பரவல் ஏற்பட்டிருப்பதாகவும் முன்கூட்டியே இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் தமது திணைக்களம் இறங்கியுள்ளதாகவும் பிரதிப் பணிப்பாளர் வி. பேரின்பநாயகம் மேலும் தெரிவித்தார். இதேவேளை கிழக்கு மாகாணத்தின் தெய்யத்தகண்டிய பகுதியிலும் படைப் புழுக்கள் பரவுவது கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றதாக கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் கலாநிதி எம் எஸ் எம் ஹுசைன் தெரிவித்தார்.


பீ.ரீ.ஏ.லத்தீப்...
(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

# தென்னாபிரிக்க பேராயர் டெஸ்மண்ட் டுட்டு: மனித உரிமையின் உலக முகவரியாக திகழ்ந்தவர்!

(நீண்ட காலமாக நிறவெறிக்கு எதிராக போராடிய வீரர் டெஸ்மண்ட் டுட்டுவின் முதலாவது ஆண்டு 26/12/22 நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)

உலகெங்கும் மனித உரிமைகளை வலியுறுத்தியும் நிறவெறிக்கு எதிராகவும் போராடி வந்தவருமான நோபல் பரிசு பெற்றவரும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் (ANC) உலகளாவிய சின்னம் என்றும் சிறந்த தார்மீக மனிதன் என்று விவரிக்கப்பட்டவரே டெஸ்மண்ட் டுட்டு.

உலக அமைதிக்கான குரலாக ஒலித்ததால் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்ட டெஸ்மன்ட் டுட்டு தென்னாபிரிக்காவைத் தாண்டியும் பூமிப்பந்தில் எங்கெல்லாம் மனிதம் வதைபடுகின்றதோ அங்கெல்லாங்கூட அட்டூழியங்களுக்கு எதிரான ஒரு உலகின் முகவரியாகத் திகழ்ந்தார்.



### உலகின் முகவரியாக திகழ்ந்தவர்:

பேராயரான டெஸ்மன்ட் டுட்டு மனிதம் என்பது இனம், மதம், மொழி என்ற எல்லைகளைக் கடந்த ஓர் உயரிய மாண்பு என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். இதனால், இஸ்ரேலிய யூதர்களால் பாலஸ்தீனியர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுக் கொண்டிருக்கும் வன்முறைகளுக்கு எதிராகக் குரலெழுப்பி வந்தார்.

ஈராக் மீது பொய்க் காரணங்கள் கூறிப் போர் தொடுத்தார்கள் என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முன்னாள் பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் இருவரையும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துமாறு வலியுறுத்தி வந்தார். நீண்ட காலமாக நிறப்பாகுபாட்டை சமாதானமான முறையில் தீர்த்து, நிறவெறிக்கு எதிராக போராடிய முன்னாள் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு 2021 டிசம்பர் 26 அன்று தனது 90வது வயதில் காலமானார்.

### வன்முறையற்ற எதிர்ப்பு போராட்டம்:

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் மக்கள் முன்னணி அரசியலில் ஒரு முக்கிய நபரான டுட்டு, அவரது தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஆசிரியரான பின்னர், 1961 இல் பாதிரியாராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் ஆறு ஆண்டுகள் பிரிட்டனில் படித்து, புகழ்பெற்ற புனித ஒழுக்கத்தை வளர்த்துக் கொண்டார். தென்னாபிரிக்காவுக்கு திரும்பிய அவர், தேவாலயப் படிநிலையின் மூலம் உயர்ந்து 1978 இல் தென்னாபிரிக்க தேவாலய சபையின் பொதுச் செயலாளராக ஆனார். 1980 களில் கறுப்பின இளைஞர்களுக்கும், தென்னாபிரிக்க படையினருக்கும் இடையே அதிகரித்துவரும் உயிராபத்தான மோதல்களுக்கு மத்தியில் வன்முறையைப் பயன்படுத்துவதை எதிர்த்து, நிறப்பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வழியாக வன்முறையற்ற எதிர்ப்புகளையும் சமரசத்தையும் டுட்டு ஏற்றுக் கொண்டு அதற்காக பணியாற்றினார்.

அத்துடன் வன்முறையற்ற ஜனநாயக மாற்றத்தை கொண்டு வருவதற்கு வெளிநாடுகளின் அழுத்தத்தை பிரயோகிக்கும் வழிமுறையாக தென்னாபிரிக்கா மீதான புறக்கணிப்பு மற்றும் தடைகளை அவர் ஆதரித்தார்.

### ஜனநாயகப்புரட்சியின்காவலர்:

ஆபிரிக்க தேசிய காங்கிரஸிற்கு நெருக்கமாக இருந்த டுட்டு அதன் அரசியல் முன்னோக்கு நிறப்பாகுபாட்டிற்கு முடிவிற்கு கொண்டுவருவது ஒரு ஜனநாயகப் புரட்சியை மேற்கொள்ள பணியாற்றினார். நிறவெறிக்கு எதிராக எந்தவொரு போராட்டத்தையும் முன்னெடுப்பதற்கு முன்னராக ஒரு தனித்த மனிதனாக அவசியமான அறிவுறுத்தலாக வன்முறையற்ற போராட்டத்துக்கு வழிசமைத்தவர் டுட்டு.

அதேவேளை ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் நோக்கம் தனது வெள்ளை இன மக்களுடன் இணைந்து குறைந்த பொருளாதார பலத்தைக் கொண்டிருந்தாலும் அரசியல்ரீதியாக ஆதிக்கம் செலுத்தக்கூடிய ஒரு கறுப்பின முன்னோடி அரசை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ், ஒரு தேசிய ஜனநாயகப் புரட்சியின் கொள்கையை முன்னெடுத்தது. அது அடிப்படையில் அன்றைய முதலாளித்துவ அரசு அமைப்பை அரசியல் சீர்திருத்தம் செய்யும் ஒரு வேலைத்திட்டமாகும். இந்த நோக்கத்திற்காக அவர்கள் தென்னாப்பிரிக்காவிற்குள்ளேயே அனைத்து வர்க்கங்களை இணைத்து முற்போக்கு அரசை கூட்டணி அரசாக உருவாக்க முற்பட்டனர். இவை அனைத்தும் கறுப்பினத் தொழிலாள வர்க்கத்தை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட கட்டுமானங்களாகும்.

### சர்வதேச அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி:

நிறப்பாகுபாட்டு எதிர்ப்பு இயக்கத்தின் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவரான டுட்டு அமெரிக்க மார்ட்டின் லூதர் கிங்குடன் ஒப்பிடப்பட்டார். 1984 ஆம் ஆண்டில், தென்னாபிரிக்காவில் நிறப்பாகுபாட்டு பிரச்சனையைத் தீர்ப்பதற்கான பிரச்சாரத்தில் ஒரு ஐக்கியப்படுத்தும் அவரது பங்களிப்புக்காக டுட்டுவுக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

### கறுப்பின பெரும்பான்மை ஆட்சி மாற்றம்:

பெப்ரவரி 1990 இல், தென்னாபிரிக்க அதிபர் டி கிளார்க் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் போன்ற அரசியல் கட்சிகள் மீதான தடையை நீக்குவதாக அறிவித்தார். நிறப்பாகுபாட்டு மற்றும் வெள்ளை சிறுபான்மை ஆட்சியின் முடிவிற்கு சைகை காட்டினார். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், ஆளும் தேசியக் கட்சி மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கு இடையே பெரும்பான்மை ஆட்சிக்கு மாறுவதற்கான பேச்சுவார்த்தைகளில் உரையாசிரியராக டுட்டு முக்கிய பங்கு வகிக்க வேண்டியிருந்தது.



நிறவெறிக்கு எதிராக போராடிய வீரர்

### மண்டேலாவுக்கு விடுதலை:

27 ஆண்டுகள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், மண்டேலாவுக்கு நம்பகமான வழித்தடமாக டுட்டு மிகவும் பயனுள்ளவராக இருந்தார். சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட சில மாதங்களுக்குள், மண்டேலா அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து, நியூயோர்க் நகரம் மற்றும் பொஸ்டனில் வெகுஜன பார்வையாளர்கள் முன்னிலையில் பேசினார்.

### வானவில் தேசம் உருவகம்:

டெஸ்மன்ட் டுட்டுவின் 'வானவில் தேசம்' என்ற உருவகம் தமது வர்க்க ஒத்துழைப்புக் கொள்கைகளை வெளிப்படுத்தியது. மண்டேலா மற்றும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைமையிலான நிறப்பாகுபாட்டிற்கு பிந்தைய ஆட்சிக்கான அரசியல் முழக்கத்தை இவ் உருவகம் வழங்கியது. அதிகாரத்தை எடுத்துக் கொண்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வங்கிகள், சுரங்கங்கள் மற்றும் பெரிய தொழில்களை தேசியமயமாக்கும் வாக்குறுதிகளை அளித்தது. சர்வதேச நாணய நிதியத்துடன் தடையற்ற சந்தைக் கொள்கைகளை செயல்படுத்துவதற்கும் தென்னாபிரிக்காவை சர்வதேச மூலதனத்திற்கு திறப்பதற்கும் பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.

### நல்லிணக்க ஆணைய தலைமை:

நிறப்பாகுபாட்டிற்கு பின்னர் டுட்டு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையத்தின் (TRC) தலைவராக இருந்து தென்னாப்பிரிக்காவிற்கு உலகளாவிய ரீதியில் மிகப்பெரிய சேவை செய்தார். அப்போது ஜனாதிபதியாக இருந்த மண்டேலா, ஆணைக்குழுவின் தலைவராக டுட்டுவை தேர்ந்தெடுத்தார். 1996 இல் அமைக்கப்பட்ட அதன் நோக்கம், நிறப்பாகுபாட்டின் கீழ் பல்லாயிரக்கணக்கான கறுப்பினத் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் மரணம் மற்றும் சித்திரவதைகளுக்கு காரணமானவர்கள் மீதான விசாரணைகளுக்கான பரந்த கோரிக்கைகளை முன்னெடுப்பதாகும்.

அதிபர் டி கிளார்க் மற்றும் அவரது தேசியக் கட்சி முதலில் நிறப்பாகுபாட்டின் கீழ் செய்யப்பட்ட குற்றங்களுக்கு பொது மன்னிப்பு கோரியது. அப்போது பாதுகாப்புப் படைகள் கலகம் செய்யும் என்று அச்சுறுத்தியது. பல வருட பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், ஒரு சமரசத்திற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

1998 இல் வெளியிடப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையத்தின் ஐந்துதொகுதி அறிக்கையில் வெள்ளை இன அரசால் இனவெறி கொடூரமாக திணிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தியது. நிறப்பாகுபாட்டிற்கு முற்றுப்புள்ளி வைத்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸை அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கான முடிவு தென்னாபிரிக்காவின் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் வெகுஜனப் புரட்சியை நோக்கமாகக் கொண்டதாக, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் எடுத்த பாதை வடிவமைக்கப்பட்டதாக எடுத்துரைத்தது.

### சர்வதேச புகழாரம்:

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் (ANC) தலைவர் சிரில் ராமபோசா, டுட்டுவை 'உலகளாவிய சின்னம்' மற்றும் 'சிறந்த தார்மீக மனிதன்' என்று விவரித்தார். அவர் ஏழு நாட்கள் உத்தியோகபூர்வ துக்க அனுஸ்டானத்துடன் கேப் டவுனில் உள்ள செயின்ட ஜோர்ஜ் தேவாலயத்தில் இரண்டு நாட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு அரசாங்க இறுதிச் சடங்கு 2021 டிசம்பரில் நடைபெற்றது.

நிறவெறிக்கு எதிரான போராட்டத்திலும், புதிய தென்னாபிரிக்காவை உருவாக்கும் போராட்டத்திலும் ஒரு முக்கியமான நபர் என்று விவரித்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா டுட்டுவை 'எனக்கும் இன்னும் பலருக்கும் ஒரு வழிகாட்டி, நண்பர் மற்றும் தார்மீக திசைகாட்டி' என்று குறிப்பிட்டார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# SLT-MOBITEL நத்தார் பண்டிகையை நிகரற்ற இணைப்புடன் கொண்டாடியது

பண்டிகைக் காலத்தில் ஏனையவர்களுக்கு பரிசுகளை வழங்கும் பாரம்பரியத்தை தொடரும் வகையில் SLTMOBITEL, “நிகரற்ற இணைப்பின் நத்தார்” எனும் தொனிப்பொருளில் அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. தேசிய மட்டத்தில் சமூக வலுவூட்டல் திட்டமாக இது அமைந்திருந்ததுடன், சகல சமூகத்தாரையும் பண்டிகையை கொண்டாடுவதற்கு ஆதரவளிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

SLTMOBITEL இன் சூழல்சார் சமூக ஆளுகை (ESG) திட்டத்தின் அங்கமாக “நிகரற்ற இணைப்பின் நத்தார்” கொண்டாடப்பட்டது. சமூக மேம்பாட்டுக்கும் வலுவூட்டலுக்கும் உதவும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தினூடாக, இலங்கையின் சகல பாகங்களையும் சேர்ந்த சிறுவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் இதர அன்பளிப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், புதிய கல்வியாண்டுக்கு தம்மை தயார்படுத்திக் கொள்ள உதவியாக அமைந்திருந்தது.



தேசிய தகவல் தொடர்பாடல் தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், தொழில்நுட்ப மேம்படுத்தல்களினூடாக சமூகங்களை மேம்படுத்துவதில் SLTMOBITELதன்னை அர்ப்பணித்துள்ளதுடன், அர்த்தமுள்ள சமூகப் பொறுப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்து, இலங்கையை அடுத்த கட்ட டிஜிட்டல் முன்னேற்றத்துக்கு கொண்டு செல்ல எதிர்பார்த்துள்ளது.

# உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் முப்பெரும் விழா




**உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு ஒன்பதாவது ஆண்டாக ஜனவரி 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் சென்னை வர்த்தக மையத்தில் கோலாகலமாக நடைபெற உள்ளது. அந்நிகழ்வில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழர்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்கள் கலந்து கொள்ள உள்ளனர். மேலும் வெளிநாடுகளில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில மத்திய அமைச்சர்கள், மேயர்கள், துணை சபாநாயகர்கள் போன்றவர்களும் சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோரும் கலந்து கொண்டு இந்தியாவில் உள்ள தொழில் கூட்டமைப்புகளுடன் இணைந்து தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தப்பட உள்ளன.**

இந்நிகழ்வில் கலை, கலாசாரம், பாரம்பரிய உணவு, உடை மற்றும் சாதனை புரிந்த சாதனைத் தமிழர்களுக்கு விருது, தமிழ் நிறுவன விருது, போன்ற விருதுகளும் தமிழர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட உள்ளன. மேலும் இந்நிகழ்வில் 'வளரும் தமிழகம்' என்ற கண்காட்சியும் அதில் தமிழகத்தில் உள்ள அனைத்துத் துறை சார்ந்த அரங்கங்கள் அமைத்து தமிழ்நாட்டில் உள்ள வளங்களை உலகிற்கு பறைசாற்றும் விதமாக அமையப் பெற உள்ளது.

இந்நிகழ்வில் சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோர்களுக்கு என சிறிய அரங்கங்களும் அமைக்கப்பட உள்ளன. அவர்கள் சிறிய அரங்கத்தில் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை காட்சிப்படுத்தி சந்தைப்படுத்தும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில் தமிழ்நாடு ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் தொழில் கூட்டமைப்பு இணைந்து பல்வேறு சிறு அரங்கங்கள் அமைக்கப்பட உள்ளன.

இதன் மூலம் சந்தைப்படுத்துதல் அல்லாமல் புதிய தொழில் வாய்ப்புகளை தேடுவதற்கும் ஏதுவாக அமையும். நிகழ்ச்சியின் இறுதியாக தென் இந்திய திரைப்பட கலைஞர்கள் கலந்து கொள்ளும் 15 ஆம் ஆண்டு எடிசன் திரை விருதுகளும் நடைபெற உள்ளது என்று உலகத்தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும் எடிசன் விருது குழு தலைவருமான செல்வகுமார் தெரிவித்தார்.

# ஜேர்மனி தீவிர வலதுசாரிகள் அரசை கவிழ்க்க முயன்ற சதியின் பின்னணி!

**தீவிர வலதுசாரிகள் மற்றும் முன்னாள் இராணுவ பிரமுகர்கள் அடங்கிய குழு ஜேர்மனி பாராளுமன்ற கட்டடமான ரீச்ஸ்டாக்கை தாக்கி ஆட்சியை கைப்பற்றத் தயாராகி வந்ததாகக் கூறப்படுகிறது.**

இதனைத் தொடர்ந்து டிசம்பர் மாத ஆரம்பத்தில் ஜேர்மனி அரசாங்கத்தை கவிழ்க்க சதித்திட்டம் தீட்டிய சந்தேகத்தின் பேரில் ஜேர்மனி முழுவதும் நடத்தப்பட்ட சோதனையில் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

Reich Citizens (Reichsbuerger) இயக்கத்தின் ஆதரவாளர்களுக்கு எதிராக 11 ஜேர்மன் கூட்டாட்சி மாநிலங்களில் உள்ள 130 இடங்களில் சுமார் 3,000 அதிகாரிகள் சோதனை நடத்தினர். ஒரு சிறிய ஆயுதக் குழுவுடன் ஜேர்மன் பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கு உறுதியான ஆயத்தங்களைச் செய்ததாக இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் சந்தேகிக்கப்படுவதாக அரசாங்க வழக்குரைஞர்கள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 25 நபர்கள் ஜேர்மன் குடிமக்கள் ஆவர். வலதுசாரி பயங்கரவாத அமைப்பில் உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் அவர்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட தீவிர வலதுசாரி அமைப்பினருக்கு பயங்கரவாத செயல்களில் ஈடுபாடு இருப்பதாகக் கூறப்பட்டு விசாரிக்கப்பட்டது. மற்றைய சந்தேக நபர்கள் பாடன்வட்டுர்ட்டெம்பேர்க், பவேரியா, பெர்லின், ஹெஸ்ஸே, தாழ் சாஸோனி, சாஸோனி, துரிங்கிங் ஆகிய மாநிலங்களிலும், அண்டை நாடுகளான ஒஸ்ரியா மற்றும் இத்தாலியிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜேர்மனியில் கடந்த சில வருடங்களாக தீவிர வலதுசாரி சித்தாந்தத்தின் தீவிரமான எழுச்சி ஏற்பட்டுள்ளது.

ஜேர்மனியின் 2ம் உலகப் போருக்குப் பிந்திய அரசியல் அமைப்பை ஏற்காத Reich Citizens movement என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களே ஜேர்மனிய நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்தார்கள். 13 ஆம் ஹெய்ன்றிக் இளவரசர் (Prince Heinrich XIII) எனக் கூறப்படும் 71 வயதான ஒரு நபர் இக்குழுவின் திட்டத்தில் முக்கிய நபராக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வலதுசாரி குழுவில் முன்னாள் இராணுவ அங்கத்தவர்களும், ஜேர்மனிய அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்தவர்களில் அடங்குவர்.

நவம்பர் 2021 இன் இறுதியில் நிறுவப்பட்ட இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள், ஜேர்மனியில் தற்போதுள்ள அரசு அமைப்பைக் கவிழ்த்து அதன் சொந்த அரசாங்கத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர்.



**ஜேர்மனியின் 2ம் உலகப் போருக்குப் பிந்திய அரசியல் அமைப்பை ஏற்காத Reich Citizens movement என்ற அமைப்பைச் சேர்ந்தவர்களே ஜேர்மனிய நாடாளுமன்றத்தில் தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்தார்கள்.**

மேலும் இராணுவ வழிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும், அரச பிரதிநிதிகளுக்கு எதிரான வன்முறையின் மூலமும் மட்டுமே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பதை அமைப்பின் உறுப்பினர்கள் நோக்கமாக கொண்டிருக்கிறார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் மொட்டைத் தலையுடனும், உலாவும் நாஜிக்கள் அல்ல. மாறாக உயர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இளவரசர் றொயிஸ் ஹைன்ரிச் அவர்களின் தலைவராக குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

இளவரசர் ஹெய்ன்றிக் ஒரு பிராங்ஃபேர்ட் நகர நிலகட்டட முகவரும், வோக்ட்லாண்ட் பகுதியை 700 ஆண்டுகளாக ஆட்சி செய்த துரிங்கிய உயர் குடும்பத்தின் வழித்தோன்றலுமாவார். மற்றொரு முக்கிய சந்தேகநபரான முன்னாள் இராணுவ பாராசூட் பிரிவு தளபதி ரூடிகர் வி.பி. அமைப்பின் இராணுவப் பிரிவிற்கு தலைமை தாங்குகிறார்.

கைது செய்யப்பட்டவர்களில் டொக்டர் பட்டம் பெற்ற வழக்கறிஞர், மருத்துவர், விமானி, ஒரு இசைகலைஞர், பேர்லின் நீதிபதியும் ஜேர்மனிக்கான தீவிர வலதுசாரி மாற்றீட்டு கட்சியின் (AFD) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பிர்கிட் மல்சாக்வின் கெமான், முன்னாள் உயரடுக்கு சிறப்புப் படைகள் (KSK) தளபதி மாக்சிமில்லியான் உட்பட, அப் படையினரின் முன்னாள் உறுப்பினர்களும் அடங்குவர்.

தேடப்பட்ட இடங்களில், பாடன் வூர்ட்டெம்பேர்க்கில் உள்ள கால்வ் நகரிலுள்ள KSK இன் முகாமும் அடங்கும். இது ஏற்கனவே வலதுசாரி பயங்கரவாத ஹன்னிபால் வலையமைப்பின் (Hannibal network) மையமாக இருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுகள் ஜேர்மனிய மத்திய குற்றவியல் விசாரணைக் குழுவின் (BKA) விசாரணைகளின் அடிப்படையில் அமைந்தன. இது கடந்த செப்டம்பர் தொடக்கத்தில் இருந்து பல நூறு அதிகாரிகளின் ஈடுபாட்டுடன் குற்றம் சாட்டப்பட்டவர்களின் தகவல்தொடர்புகளைக் கண்காணித்து இடைமறித்து வருகிறது. வங்கிக் கணக்குகள் விசாரிக்கப்பட்டு, வலைத்தள கலந்துரையாடல் குழுக்களும் கண்காணிக்கப்பட்டன.

ஹெய்ன்றிக் இளவரசர் தலைமையிலான ஒரு குழு நவம்பர் 2021 முதல் ஜேர்மனியில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், அதன் சொந்த அரசு கட்டமைப்புகளை நிறுவுவதற்கும் திட்டமிடுவதற்காக தொடர்ந்து இரகசியமாக சந்தித்து வந்திருக்கிறது.

ஹெய்ன்றிக் எதிர்கால அரச தலைவராக இருக்க வேண்டும், மற்ற உறுப்பினர்கள் நீதி, வெளிவிவகாரங்கள் மற்றும் சுகாதாரம் உட்பட பல்வேறு அமைச்சகங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என திட்டமிடப்பட்டிருந்தது.

தீவிர வலதுசாரிகளும் அதன் சித்தாந்தமும் எந்த அளவிற்கு ஊடுருவி, அரசு எந்திரம் மற்றும் ஆளும் வட்டங்களால் பாதுகாக்கப்படுகின்றன என்பதை தற்போது இந்தக் குழுவின் நடவடிக்கைகள் உறுதிப்படுத்தி உள்ளன.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# இலக்கிய படைப்பு மொழிபெயர்ப்பில் மிகுந்த ஆற்றல் நிறைந்தவர் மலரன்பன்

**ஏதாவது ஒரு மொழியில் எழுதப்பட்ட ஆவணங்களை கட்டுரைகளை கதைகளை பிறிதொரு மொழிக்கு மாற்றம் செய்வது மொழிபெயர்ப்பாகும். பிறமொழிகளை அறிந்திருந்தாலும் எல்லா எழுத்தாளர்களும் இதனை இலகுவில் செய்துவிடமுடியாது. அதனால் தான் மொழிபெயர்ப்பு என்பது ஒரு கலையாகும் என 50 வருடங்களுக்கு முன்பே பேராசிரியர் ஹேமபால விஜயவர்தன அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். இக்கலையை லாவகமாக கற்றிருக்கும் எழுத்தாளர்களாக விரல்விட்டு எண்ணக் கூடியவர்களிடையே மாத்தளை மலரன்பன் மிக முக்கியமானவர்.**

தமிழிலக்கிய உலகிலும் சிங்கள இலக்கிய உலகிலும் தனக்கென்று ஒரு தடத்தை பதித்து நிற்பவர் மலரன்பன் மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட சிங்கள இலக்கியத்துறையில் மொழிபெயர்ப்பு என்ற ஒரு அம்சம் 1950களின் பிற்பாடு முனைப்பு பெற்றது எனலாம். எனவே தமிழ் மொழி இலக்கியங்கள் சிங்களத்திற்கும் சிங்கள மொழி இலக்கியங்கள் தமிழுக்கும் மாற்றம் செய்யப்படும் முயற்சிகள் அதற்கும் பிற்பட்ட காலங்களிலேயே முன்னெடுக்கப்பட்டுள்ளன எனலாம்.

அந்த வகையில் தமிழ் படைப்புகளை சிங்களத்திற்கு மொழியாக்கம் செய்த எழுத்தாளர்களாக உபாலி லீலாரத்ன, மடுளுகிரியே விஜயரத்ன, சரத் ஆனந்த, பி.எம்.ரணவக்க, ஹேமச்சந்திரன் பத்திரன, திக்குவல்லை கமால், ஏ. சி. எம். கராமத், இப்னு அஸூமத், புஷ்பா ரஞ்சனி, முஹம்மத் ரசூக் என அடுக்கிக் கொண்டே போகலாம்.

அதேபோல் சிங்கள நாவல்களை, சிறுகதைகளை, புதினங்களை தமிழுக்குத் தந்த எழுத்தாளர்களாக எம்.எம் உவைஸ் தம்பிஜயா தேவதாஸ், சுந்தரம் சௌமியன், மடுளுகிரியே விஜயரத்னா, எம். எஸ் எம். யாகூத், திக்குவல்லை கமால், எம்சி ரஸ்மின் சரோஜினி அருணாச்சலம் என தொடரும் பட்டியலில் பல சிறுகதைகளையும் இரண்டு நாவல்களையும் மொழிபெயர்த்ததனூடே மலரன்பனும் இணைந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பிள்ளையார் சுழி, கோடிச்சேலை ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும், பாலைவனங்களில் எனும் தமிழ் நாவலையும் மெல்லிசைப் பாடல்களையும் தந்து தமிழுக்கு வனப்பு சேர்த்து வரும் மலரன்பன் எப்போதிருந்து எவ்வாறு தன்னை மொழிபெயர்ப்பு முயற்சிகளில் ஈடுபடுத்தி சிங்கள இலக்கிய எழுத்துலக ஆளுமைகளுக்கு இடையிலும் எவ்வாறு தன்னை நிலை நிறுத்திக் கொண்டார் என்பதும் ஆராயத்தக்கது. 1975 கால அளவில் பல்வேறு வாழ்க்கை சவால்களுக்கு மத்தியில் மலரன்பன் இடைக்கிடையே கதைகளை எழுதிக்கொண்டிருந்தார். அப்போது அதிக எழுத்தாளர்கள் காணப்பட்டாலும் தொகுதிகளாக வெளிவந்தவை அரிதாகவே இருந்தன.



கட்டத்திலேயே தற்போது கோடிச் சேலை எனும் சிறுகதைத் தொகுதியில் காணக் கிடைக்கும் 'தார்மீகம்' எனும் இவரது சிறுகதையை மாத்தளை புஷ்பா ரஞ்சனியும்,இப்னு அசூமத்தும் சேர்ந்து சிங்களத்திற்கு மொழிபெயர்ப்பு செய்து 'தர்மிஸ்டய' எனும் பெயரில் 'விவரண' எனும் சஞ்சிகையில் பிரசுரிக்கச் செய்தார்கள். இக்கதை 1977 இனக்கலவரத்தை பின்னணியாகக் கொண்டிருந்ததோடு சிங்கள இலக்கியவாதிகளுக்கிடையிலும் பேசப்படும் கதையாக மாறியது.

இதன் மூலம் மலரன்பன் எனும் எழுத்தாளுமை சிங்கள இலக்கிய உலகிற்கும் அறிமுகப்படுத்தப்பட்டார். சிங்கள வாசகர்களிடையே பிரபல்யம் பெற்றிருந்த விவரண சஞ்சிகையில் வெளிவந்த இவரது இன்னும் பல கதைகளையும் தொகுத்து காளிமுத்துகே புரவெசிபாவய எனும் தலைப்பில் தொகுதியாக வெளியிட்டார்கள். இதில் முதலிடத்தை பிடித்த கதையாக மலரன்பனின் உறவுகள் எனும் கதை அமைந்தது. இத்தொகுதிக்கு முன்னுரை எழுதிய பிரபல விமர்சகர் சுனந்த மகேந்திர இக்கதையை சிலாகித்து எழுதியிருந்தமை முக்கிய அம்சம். இதனால் மலரன்பனுக்கு பல சிங்கள இலக்கியவாதிகள் நண்பர்களாக வாய்த்தார்கள்.

அவரது முதல் நண்பராக இன்று ஐம்பது வருடங்களுக்கு மேலாக சிங்கள எழுத்துலகின் பிதாமகனாக விளங்கும் பியதாச வெலிகண்ணகே அவர்கள் கிடைத்தார் என மலரன்பனே குறிப்பிடுவார். இந்நட்பு மாத்தளையில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் சாகித்திய சங்சதய எனும் சிங்கள எழுத்தாளர்களை அதுவும் சாகித்திய விருது பெற்ற எழுத்தாளர்களை மட்டுமே கொண்டியங்கும் அமைப்பில் அங்கத்துவம் பெற்றிருக்கும் ஒரே ஒரு தமிழ் எழுத்தாளர் மலரன்பன் என்பதும் கவனிக்கத்தக்கது.

இப்பின்னணியிலேயே நீண்ட நாட்கள் எழுதாமல் இருந்த மலரன்பன், ஜி.பி சேனநாயக்க எனும் பிரபல எழுத்தாளரின் சிறுகதையான பலிகெனீம என்னும் கதையை பலி என்ற பெயரில் மொழி பெயர்க்க இப்பிரதி அந்தனி ஜீவாவிடமிருந்து டோமினிக் ஜீவாவிடம் சென்று பிரசுரம் பெற்றதென மலரன்பன் சுவாரஸ்யமாக குறிப்பிடுவார். இம்மொழிபெயர்ப்பு முயற்சிகளில் அவரது துணைவியாரும் பங்களிப்பு செய்தமையை பெருமிதத்தோடு நினைவு கூறுவார். மலரன்பனின் இம்மொழிபெயர்ப்பு முயற்சிகளே மாத்தளையின் தலைசிறந்த சிங்கள இலக்கிய ஜாம்பவான்களான பியதாச வெலிகண்ணகே (நான்கு முறை சாகித்திய விருது) மானேவ (மூன்று முறை சாகித்திய விருது) விமலா ஆரியரத்ன, ஆனந்த அபேவிக்ரம, நளினி தென்னகோன், நிஷாந்த் கருணாரட்ன, சிறில் ரத்னாயக்க சுஜாதா அழகக்கோன், கமல் அழககோன் என்பவர்களின் தொடர்புகளால் மலரன்பனின் படைப்புலகமும் விரிவடையத் தொடங்கியது. இதனூடாகத்தான் பியதாச வெலிகண்ணகே அவர்கள் மலரன்பனின் பிள்ளையார் சுழியை கொடகே பதிப்பாக வெளிவரச் செய்தார்.

மலரன்பனின் இத்தகு மொழிபெயர்ப்பு ஆற்றல் பற்றி அவரிடம் நேரடியாக கலந்துரையாடிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். "அவன் ஓர் அபூர்வ சிறுவன் நாவலின் சிங்கள மொழி பிரதியிலே மகனின் கல்வியைப் பற்றி சிந்திக்காது சூதாட்டத்தில் மட்டுமே கவனம் கொள்ளும் தந்தையைப் பார்த்து அந்த படிப்பறிவில்லாத கிராமத்து தாய் கிராமிய வழக்கில் ஒருவரை மிகத் தாழ்வாக திட்டுவதற்கு பயன்படுத்திய வார்த்தையே எழுதப்பட்டிருந்தது. ஆனால் நான் அதனை தவிர்த்து விட்டு " ஒனக்கு பூர்வா சூதாடுகிறதுன்னா காசு தேட முடியும்" என கோபத்தோடு ஒருமையில் விழிக்கும் வார்த்தையை மட்டும் பயன்படுத்திக் கொண்டதாக குறிப்பிட்டார். மொழிமாற்றம் செய்வதென்பது தான் வாழும் சமூகம், கலாசாரம், மக்களின் மனோநிலை என்பனவற்றை நாடி பிடிக்கும் ஒரு நாகரிகக் கலை என்றே குறிப்பிடத் தோன்றுகிறது. அக்கலையறிந்த வல்லுனராக மலரன்பன் திகழ்கின்றார் என்பதும் மறுப்பதற்கில்லை.

**மாத்தளை**
**ஜெஸீமா ஹமீட்...**



# கிழக்கின் குரல்

## மட்டக்களப்பில் சோளம் பயிர்களில் மீண்டும் படைப்புழுக்களின் பரவல்

### கிழக்கு மாகாண விவசாய திணைக்கள பணிப்பாளர் வழிகாட்டலில் கள விஜயம்

மட்டக்களப்பு சுழற்சி நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் செய்கை பண்ணப்பட்ட சோளம் பயிர்களில், தற்போது படைப்புழுக்கள் பரவி வருவதை விவசாயத் திணைக்களம் கண்டறிந்துள்ளதைத் தொடர்ந்து, அப்பயிர்களில் ஏற்பட்டுள்ள படைப் புழுக்களை உடனடியாக அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தின் அறிவுறுத்தலுக்கமைய, கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.எச்.ஹுசைனின் வழிகாட்டுதலில் விவசாய விரிவாக்கல் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் வி.பேரின்பநாயகத்தின் தலைமையிலான குழுவினர், சோளம் செய்கை பண்ணப்பட்ட ஒரு சில பகுதிகளுக்கு கள விஜயத்தை நேற்று முன்தினம் (22) மேற்கொண்டதுடன், அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சோளம் பயிர்களில் காணப்படும் படைப்புழுக்களின் தாக்கம் தொடர்பில் இக்குழுவினர் கண்டறிந்ததுடன், இப்படைப்புழுக்களை அழிப்பதற்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சோளம் பயிர்ச் செய்கையாளர்களுக்கு இக்குழுவினர் ஆலோசனை வழங்கினர்.

இது தவிர, விவசாயக் கிராமங்களில் படைப்புழுக்களின் ஊடுருவலை முன்கூட்டித் தடுப்பதற்கான ஆலோசனைகளைக் கொண்ட கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், அவை தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாக, மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் வி.பேரின்பநாயகம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரையில் சிறிதளவில் படைப்புழுக்களின் பரவல் ஏற்பட்டிருப்பதாகவும் இவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகளில் தமது திணைக்களம் இறங்கியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தின் தெஹியத்தகண்டியிலும் படைப்புழுக்கள் பரவுவது கண்டறியப்பட்டுள்ளதுடன், அங்கும் இப்படைப்புழுக்களை அழிப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக, கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.எஸ்.எம்.ஹுசைன் தெரிவித்தார்.

## மட்டு. வைத்தியசாலைக்கு சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கல்



மட்டக்களப்பு விசேட, புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சிறுநீரக நோயாளர்களுக்கான சிறுநீரக இரத்தச் சுத்திகரிப்பு இயந்திரமொன்று, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசா வழங்கி வைத்தார்.

'சுவாசம்' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் 39 இலட்சம் ரூபா பெறுமதியான இவ்வியந்திரத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கலாரஞ்சனி கணேசலிங்கத்திடம் நேற்று முன்தினம் (22) அவர் வழங்கி வைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவின் 'சுவாசம்' எனும் திட்டத்தின் கீழ் 55ஆவது வைத்தியசாலையாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டு, இம்மருத்துவ இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

## மூதூரில் டெங்கு ஒழிப்புப் பணி

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த சில தினங்களாக டெங்கு ஒழிப்புப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி எம்.பி.எம்.ஹில்மியின் வழிக்காட்டலுக்கமைய டெங்கு ஒழிப்புப் பணி இடம்பெறுவதுடன், இதில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்புச் செயலணிக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

டெங்கு நோய் அபாயத்திலிருந்து பாதுகாப்புப் பெறும் வகையில் தமது வீட்டு வளாகம், தமது வீட்டிலுள்ள குளிர்சாதனப்பெட்டி, நீர்த்தொட்டி, மலசலகூடம் உள்ளிட்டவற்றை ஒவ்வொரு குடியிருப்பாளரும் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமெனவும், மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி எம்.பி.எம். ஹில்மி கேட்டுக்கொண்டுள்ளார்.

## பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நலன்களுக்கு மதிப்பளிக்கின்றோம்

### மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு



கொவிட் 19 தொற்றை ஒழித்தது போன்று போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையை ஒழிக்க வேண்டுமென, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறிகாந் தெரிவித்தார்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் சமூகத்தில் முகங்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான ஆய்வு அறிக்கையொன்று வெளியிடும் நிகழ்வு கல்லடி கிறீன் காடன் ஹோட்டலில் நேற்று (23) நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'எங்களுக்கான பாதையினை உருவாக்குதல், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வரைவிலக்கணங்களை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளின் கீழ், விழுது அமைப்பின் சமமான பங்குபற்றுதலுடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றிய போது,

"மட்டக்களப்பு மாவட்டத்தில் 35,000 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. அதில் 15,000 குடும்பங்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ளனர். அரசாங்கத்தின் எந்தவொரு திட்டமாயினும் அதில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நலன்களை முன்னுரிமைப்படுத்தி வருகின்றோம்" என்றார்.

"தற்போதைய பெண்களில் பலர், அரசாங்க உத்தியோகத்தில் உயர்ந்த பதவிகளில் உள்ளனர், அரசியலில் ஈடுபாடு உள்ளவர்களாக பல பெண்கள் உள்ளனர், அரச சார்பற்ற நிறுவனங்களில் தலைவி உள்ளிட்ட பல் பரிமாணங்களில் பெண்கள் உள்ளனர்" எனவும் அவர் தெரிவித்தார்.

## நாட்காட்டியில் உரிய தினங்களை இனங்காணும் ஆற்றலுள்ள மாணவன்

மாளிகைக்காடு குறூப் நிருபர்



கல்முனை அஸ்ஸுஹறா வித்தியாலயத்தில் தரம் நான்கில் கல்வி கற்கும் மாணவனான நிஜாம் முஹம்மட் சாக்கிப் என்பவர் தனது அபார ஞாபக சக்தியினூடாக நாட்காட்டியில் உரிய தினங்களை இனங்காணும் ஆற்றலை பெற்றுள்ளார்.

இந்நிலையில், அவரது திறமையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று, அப்பாடசாலை அதிபர் மஜீதியா தலைமையில் பாடசாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர், பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கஜமுத்துடன் ஒருவர் அம்பாறையில் கைது


அம்பாறையின் மஹாஓயா பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி கஜமுத்தை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சோதனை நடத்தி இச்சந்தேக நபரை நேற்று முன்தினம் (22) கைது செய்தனர். இதனைத் தொடர்ந்து, சந்தேக நபரை மஹாஓய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

பதியத்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடையவரையே இவ்வாறு கைது செய்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## சாய்ந்தமருதில் போதைப்பொருள் வைத்திருந்த ஒருவர் கைது

நிந்தவூர் குறூப் நிருபர்



அம்பாறையின் சாய்ந்தமருதுப் பிரதேசத்தில் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர், இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்போதைப் பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இரண்டு வாகனங்களும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதுடன், 53 கிராமும் 49 மில்லிகிராம் நிறையுடைய போதைப்பொருளும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அக்கரைப்பற்று இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து இக்கைது நேற்று முன்தினம் (22) இடம்பெற்றது.

தற்போது இச்சந்தேக நபர், கல்முனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகின்றார்.

அத்துடன், இப்போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளில் இவருடன் இணைந்து செயற்பட்ட ஏனையோரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸ் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்லடி தொண்டர் நிறுவனத்தில் திருடிய சந்தேக நபர் கைது

புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்



மட்டக்களப்பின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி பிரதேசத்திலுள்ள தொண்டர் நிறுவனமொன்றின் அலுவலகத்தில் திருடிய சந்தேக நபரொருவரை கைது செய்ததுடன், அவரிடமிருந்து திருடிய பொருட்களைக் கைப்பற்றியதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

கல்லடியிலுள்ள மனிதநேய தகவல் மையம் எனும் தொண்டர் நிறுவனத்தின் அலுவலகத்தில் இம்மாதம் 15ஆம் திகதி இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இந்நிலையில், திருடிய பொருட்களை ஏறாவூர் பகுதிக்கு விற்பனைக்காக இச்சந்தேக நபர் எடுத்துச் சென்று கொண்டிருந்த போதே, நேற்று முன்தினம் (22) அவரைக் கைது செய்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

வீடியோக் கமெரா, ரப்கணினி, ஸ்பீக்கர் உள்ளிட்டவையே மேற்படி தொண்டர் நிறுவனத்திலிருந்து திருடப்பட்டன. இச்சந்தேக நபரிடம் தொடர்ந்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருமலையில் வெடிபொருள் வைத்திருந்த ஒருவர் கைது

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலையின் ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலங்கைத்துறை முகத்துவாரம் பிரதேசத்தில் வெடிபொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஈச்சிலம்பற்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சோதனை நடத்தி, மேற்படி இடத்தைச் சேர்ந்த 47 வயதுடைய இந்நபரை நேற்று முன்தினம் (22) கைது செய்ததுடன், அவரிடமிருந்து ஒருகிலோ 500 கிராம் வெடிபொருள் மற்றும் வெடிமருந்தை வெடிக்க வைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் 22 அடி நூலைக் கைப்பற்றியதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வெடிபொருள் எவ்வகையைச் சேர்ந்தது என்பது தொடர்பிலும் இவர் எக்காரணத்துக்காக இவற்றை வைத்திருந்தார் என்பது தொடர்பிலும் விசாரணை நடத்தி வருவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## சேனைக்குடியிருப்பில் 'நாவலர் வீதி' பெயரிடல்

காரைதீவு குறூப் நிருபர்



எதிர்வரும் 2023ஆம் ஆண்டை நாவலர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கல்முனையின் சேனைக்குடியிருப்பு பிரதேசத்தில் வீதியொன்றுக்கு 'நாவலர் வீதி' எனப் பெயரிடப்பட்டு, அவ்வீதிக்கான பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் கே.செல்வராஜாவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (22) இவ்வீதிப் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஏ.ஜே.அதிசயராஜ், இந்தியாவிலிருந்து வருகை தந்த உலகப் புகழ்பெற்ற ஓவியர் மு.பத்மவாசன், ஓய்வுநிலை பொறியியலாளர் த.சர்வானந்தா, கல்முனை மாநகர சபை உறுப்பினர் கே.செல்வராஜா ஆகியோர் இவ்வீதிப் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தனர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமானது எதிர்வரும் 2023ஆம் ஆண்டை நாவலர் ஆண்டாக ஜனாதிபதி முன்னிலையில் பிரகடனப்படுத்தியிருந்தது.

## தீகவாவியில் சில குடும்பங்களுக்கு புதிய நீரிணைப்புக்கான ஏற்பாடு



திராய்க்கேணி தினகரன் நிருபர்

தீகவாவியிலுள்ள சில குடும்பங்களுக்கு புதிய நீர் இணைப்பை பெற்றுக்கொள்வதற்கான வசதியை அக்கரைப்பற்று அந்நூர் தொண்டு நிறுவனம் செய்து கொடுத்துள்ளது.

இனங்களுக்கும் மதங்களுக்குமிடையில் புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்பும் நோக்கில், காசோலை மூலம் மேற்படி உதவியை அக்கரைப்பற்று அந் நூர் தொண்டு நிறுவனம் அண்மையில் வழங்கியுள்ளது.

இதற்கான நிதியுதவியை வெளிநாடுகளில் வசிக்கும் அக்கரைப்பற்றை சேர்ந்தவர்கள் வழங்கியிருந்தனர்.

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சில் மனநல மேம்பாட்டு பிரிவு ஆரம்பம்

**கோப்பாய் குறுப் நிருபர்**



வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் தனியான பிரிவாக மனநல மேம்பாட்டு பிரிவு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவானது போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை வழிப்படுத்தல், ஒட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல், தற்கொலைக்கு முயற்சிப்பவர்களை தடுத்து வழிப்படுத்தல் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை பராமரித்தல் போன்ற செயற்பாடுகள் இப்பிரிவின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் குறித்த திட்டங்களை கவனிப்பதற்காக மனநல மேம்பாட்டு பிரிவின் இணைப்பாளராக வைத்திய கலாநிதி த. குகதாசனை வட மாகாண ஆளுநர் நியமித்துள்ளார்.

இச்செயற்திட்டத்தை முறையாக மேற்கொள்வதற்கு நேற்று முன்தினம் புதன்கிழமை வட மாகாண சுகாதார பணிப்பாளர் , உளநல மருத்துவர்கள் மற்றும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் அடங்கிய கூட்டமொன்று அண்மையில் அமைந்துள்ள வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய உப்பு நிறுவனத்திற்கு கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் திடீர் விஜயம்

**(மன்னார் குறுப் நிருபர் )**



மன்னாருக்கு வருகை தந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் திசநாயக்க நேற்று வெள்ளிக்கிழமை(23) காலை மன்னார் பெரிய கடைப்பகுதியிலுள்ள தேசிய உப்பு நிறுவனத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தின் போது இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கே.திலீபன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது தேசிய உப்பு நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் உற்பத்திகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டதோடு, உப்பு உற்பத்தியையும் பார்வையிட்டார்.

மேலும் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய ஏனைய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினர்.

உப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலந்து கொண்டதோடு, மன்னார் தேசிய உப்பு நிறுவனத்தின் அதிகாரிகளும் பணியாளர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வெடிமருந்துகள் மீட்பு

யாழ்ப்பாணம் அரியாலை உதயபுரம் கடற்கரை பகுதியிலிருந்து வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களின் பிரகாரம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அப்பகுதியில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது , பயன்படுத்தப்படாது குவித்து வைக்கப்பட்டிருந்த வலைகளுக்குள் இருந்து வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

வெடிமருந்துகள் மீன் பிடிப்பதற்காக டைனமேட் தயாரிக்கும் நோக்குடன் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சடலம் மீட்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர் வாதரவத்தை பகுதியில் ஆடு மேய்க்க சென்றிருந்த இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வாதரவத்தை பொக்கணை பகுதியைச் சேர்ந்த செ.ராகுலன் (வயது25) என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆடு மேய்க்க சென்றிருந்த நிலையில் நேற்றை தினம் வெள்ளிக்கிழமை காலை வரையில் வீடு திரும்பவில்லை . இளைஞனின் தந்தை தேடி சென்ற போதே இளைஞன் சடலமாக காணப்பட்டுள்ளார்.

வலிப்பு காரணமாக உயிரிழந்திருக்கலாம் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நிலங்கள் விடுவிக்கப்படாத வரை பேச்சுவார்த்தைகள் அர்த்தமற்றது

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி

**மன்னார் குறுப் நிருபர்**



தமிழர் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகள் இந்தியாவின் அனுசரணையிலும் உலக நாடுகளின் மேற்பார்வையிலும் நடைபெற வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் தமிழர் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை தொடர்பில் எதிர்வரும் 31ஆம் திகதி வரை கால அவகாசம் கொடுத்திருந்தோம். அதில் இராணுவம் மற்றும் ஏனைய திணைக்களங்களின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்கள் தொடர்பாக ஒரு தீர்மானத்தை சொல்லி இருந்தோம். அதனடிப்படையில் ஜனாதிபதி எதிர்வரும் 31ஆம் திகதி வரை கால அவகாசம் கேட்டிருந்தார். அந்தவகையில் இராணுவம் எந்தெந்த இடங்களை விடப் போகிறது என்ற கேள்வி இருக்கிறது. பேச்சுவார்த்தையின் போது நாங்களும் இந்த இராணுவம் கைப்பற்றிய சில இடங்களை வரைமுறையோடு சுட்டிக்காட்டியுள்ளோம்.

அதேபோல் மிக மோசமாக வயல் காணிகளையும் மக்களின் வீட்டுக்கு காணிகளையும் எல்லைகளை போடுகின்ற ஒரு துர்பாக்கிய நிலை காணப்படுகிறது.

பேச்சுவார்த்தை என்பது அவசரப்பட்டு செல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை.

அரசியல் கைதிகள் 5 பேர் மட்டுமே விடுதலை செய்ய முடியும் என்பது நல்ல விடயமாகவிருந்தாலும் அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும். குறிப்பாக தீர்ப்பு வழங்கப்பட்டு வெளியில் வந்தவர்களுக்கும் மீண்டும் வழக்கு போடப்படும் ஒரு துர்பாக்கிய நிலை நிலவுகின்றது. ஜனாதிபதி இதுதொடர்பில் கவனம் செலுத்தி அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கவேண்டும்.

இந்த நிலத்தை காப்பாற்றுவதற்காகவே எங்களுடைய போராளிகள், இயக்கங்கள் அனைத்தும் உருவாகியது. அதற்காக பல போராளிகள், பல மக்கள் உயிர் தியாகம் செய்துள்ளனர். ஆகவே நிலங்கள் விடுவிக்கப்படாத வரைக்கும் பேச்சுவார்த்தை என்பது அர்த்தமற்று போகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அனுமதியின்றி கொண்டுவரப்பட்ட 120 கிலோ மாட்டிறைச்சி அதிகாரிகளால் அழிப்பு



முல்லைத்தீவு தண்ணீருற்று பொதுச்சந்தைக்கு சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 120 கிலோ மாட்டிறைச்சி பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் முள்ளியவளை உப அலுவலக ஊழியர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல மாடுகள் உயிரிழந்தமையால் மக்கள் மத்தியில் அச்சநிலை காணப்படுவதால் உரிய முறையில் அனுமதி பெற்று மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றனர்.

## அச்சுவேலியில் வன்முறை கும்பல் அட்டகாசம்; வீடு, சொத்துக்களுக்கு சேதம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியிலுள்ள வீடொன்றினுள் புகுந்த வன்முறை கும்பலொன்று வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன் , சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்து விட்டு தப்பி சென்றுள்ளனர்.

அச்சுவேலி தென்மூலை கைத்தொழில் பேட்டை பிரதான வீதியில் அமைந்துள்ள வீடொன்றினுள் மோட்டார் சைக்கிள்களில் வந்த 06 பேர் கொண்ட வன்முறை கும்பல், வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் வீட்டினுள்ளே நுழைந்து ஜன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்து சேதப்படுத்தியுள்ளது.

பின்னர் வீட்டிலிருந்த மீன் தொட்டியை அடித்து உடைத்து, வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் கண்ணாடிகளையும் அடித்து நொறுக்கி விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் உரிமையாளரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மதுரையில் பன்னாட்டு கருத்தரங்கு ஆரம்பம்





யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் தமிழ் நாடு அரசின் உலகத் தமிழ் சங்கம் மதுரையும் இணைந்து நடாத்தும் தமிழ் வளர்ச்சியில் இலங்கை தமிழரின் பங்களிப்பு என்ற பொருளில் அமைந்த பன்னாட்டு கருத்தரங்கு மதுரையில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப அமர்வில் உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் முனைவர் ப. அன்புச்செழியனிடம் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க வெளியீடான சங்கப் பேழை என்ற இதழ் வழங்கப்பட்டது. தொடக்க நிகழ்வைத் தொடர்ந்து நான்கு ஆய்வு அரங்குகள் இடம்பெற்றன. மாலை கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி தலைமையில் கவியரங்கம் இடம்பெற்றது.

நேற்று நான்கு அமர்வுகளாக ஆய்வரங்கு இடம்பெறுவதோடு சிறப்பு பட்டிமன்றமும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் பேராசிரியர் சண்முகதாஸ் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன், கவிஞர் கு றஜீவன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். இந்நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான ஆய்வுமாணவர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஈழத்து சிதம்பர திருவிழாவிற்கான ஏற்பாடுகள் பூர்த்தி

**யாழ்.விசேட நிருபர்**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைநகர் ஈழத்து சிதம்பர வருடாந்த திருவெம்பாவை உற்சவத்துக்குரிய சகல ஆயத்த பணிகளும் பூர்த்தியடைந்துள்ளதாக காரைநகர் பிரதேச சபை தவிசாளர் க, பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இவ்வருட திருவெம்பாவை உற்சவத்தை சிறப்பாக முன்னெடுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்றைய தினம் காரைநகர் பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் இவ்வருட திருவெம்பாவை உற்சவத்தினை சிறப்பாக முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளோடு கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து விடயம் தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது போக்குவரத்து நேர ஒழுங்கமைப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதோடு, நீர் மற்றும் திண்மக்கழிவகற்றல் விடயங்களை பிரதேச சபை பொறுப்பேற்பதாகவும் பாதுகாப்பு மற்றும் வீதி ஒழுங்குபடுத்தலை பொலிஸார் மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது

தற்போது புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து ஈழத்து சிதம்பர திருவெம்பா உற்சவத்தை காண்பதற்கு வெளிநாட்டவர்கள் வருகை தந்த வண்ணமே உள்ளனர்.

## உதயபுரம் பகுதியில் படகிற்கு தீ வைப்பு

**பருத்தித்துறை விசேட நிரூபர்**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை உதயபுரம் பகுதியில் நேற்று முன்தினம் (22) இரவு இனந்தெரியாத நபர்களால் படகிற்கு தீ வைத்து எரியூட்டப்பட்டது.

நேற்று இரவு 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் படகிற்கு தீ வைத்ததுடன் மீன்பிடி உபகரணங்களையும் வாளினால் வெட்டி சேதப்படுத்தியிருந்தனர்.

சேதப்படுத்திய காட்சி அங்கு வீடொன்றில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவில் பதிவாகியிருந்தது.

இதுதொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிராம சேவகர் அலுவலகத்துக்கு இனந்தெரியாதோர் தீ வைப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.தெல்லிப்பழை பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கட்டுவன் மேற்கு ஜே 239 கிராம சேவகரின் அலுவலகத்திற்கு விஷமிகள் தீ வைத்துள்ளனர்.

தீயினால் அலுவலகத்திலிருந்த முக்கிய ஆவணங்கள் பல தீயில் எரிந்து அழிந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன .







மன்னார் மாவட்டம் முசலிப் பிரதேசத்தை பூர்வீகமாகக் கொண்ட உலமாக்களுக்கான விசேட ஒன்றுக் கூடலொன்று அண்மையில் முசலிப் பிரதேச புதுவெளிக் கிராமத்தில் அமைந்துள்ள அத்தக்வா ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வரவேற்புரையை அஷ்ஷெய்க் சைபுல்லாஹ் (ஷர்க்கி,மதனி) ஒன்றுக்கூடலுக்கான நோக்கத்தை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் S.M.நிஸ்தாக் (காஸிமி,மதனி) நிகழ்ச்சி நிரலின் ஒருங்கிணைப்பாளராக அஷ்ஷெய்க் M.S.M.முஜாஹித் (காஸிமி , மதனி) ஆகியோர் சிறப்பான முறையில் முன்வைத்தனர். இந்நிகழ்வின் விசேட அதிதியாக சிலாவத்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி S.A.S .புஷ்பகுமார, (OIC) கலந்து கொண்டு போதைப்பொருட்கள் பாவனையை தடுப்பதற்கான வழிகாட்டலையும், ஆலோசனைகளையும் முன்வைத்தார். இந்நிகழ்வில் இப்பிரதேசத்தை பூர்வீகமாகக் கொண்ட மூத்த இளைய உலமாக்கள் 150 கலந்துகொண்டனர். (படம்: இக்பால் அலி)




# போசாக்கின்மை குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

ஹற்றன் சுழற்சி நிருபர்)

கொட்டகலை பிரதேச சபை தலைவர் ராஜமணி பிரசாந்த் தலைமையில் மாதாந்த சபை அமர்வு பிரதேச சபை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது உப தலைவர் உட்பட உறுப்பினர்கள் அனைவரும் பங்கு கொண்டனர்.

இதன்போது கொட்டகலை பிரதேச சபை இந்திய துணை உயர் அதிகாரி காரியாலயத்தின் ஊடாக கொட்டகலை பிரதேச சபைக்கு அதிகளவான புத்தகங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு அலுவலகத்தின் ஊடாக தோட்டப் புறங்களில் காணப்படும் நூலகங்களுக்கு தேவையான பல்வேறு புத்தகங்களை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.



அதேபோல தோட்டப்புறங்களில் காணப்படுகின்ற சுகாதார நிலையங்களுக்கு தேவையான பல்வேறு மருந்துப்பொருட்களை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மந்தபோசனை குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான பல்வேறு வேலைத் திட்டங்களும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கிடையில் போதைப்பொருட்களை விநியோகிக்கும் நபர்களை கண்டறிந்து அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தலைவர் ராஜமணி பிரசாந்த் தெரிவித்தார்.

மேலும் கொட்டகலை பிரதேச சபையின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு அபிவிருத்தி வேலை திட்டங்கள் தொடர்பாகவும் சபையில் கலந்துரையாடப்பட்டது.

# டெல் தோட்டத்திலிருந்து இலங்கை பொலிஸ் சேவைக்கு மூவர் தெரிவு

தலவாக்கலை குறூப் நிருபர்

அக்கரப்பத்தனை டெல் தோட்டத்திலிருந்து முதல் தடவையாக இலங்கை பொலிஸ் சேவைக்கு மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜெயகுமார் தர்ஷன்,பாலச்சந்திரன் பிரதீப்,சிவகுமாரன் லீபன் ஆகிய மூவரும் கொழும்பு, அம்பாந்தோட்டை, பாணந்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு தெரிவாகியுள்ளனர். இவர்கள் லோவ கிரண்லி பாடசாலை பழைய மாணவர்களாவர்.

இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு தோட்ட பொது மக்களின் ஏற்பாட்டில் அண்மையில் நடைப்பெற்றது.





இந்நிகழ்வில், மூவரும் தோட்ட மக்களால் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் அதிதியாக லோவ கிரண்லி பாடசாலை அதிபர் தேசமாணி தேசபந்து குழந்தைவேலு பாலகிருஸ்ணன், சமூக செயற்பாட்டாளர் ஸ்டீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நிவித்திகல பிரதேச சபை பட்ஜட் நிறைவேற்றம்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின். அதிகாரத்தின் கீழ் உள்ள நிவித்திகல பிரதேச சபை வரவு செலவுத் திட்டம் 21 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. நிவித்திகல பிரதேச சபை கேட்போர் கூடத்தில் தலைவர் குலதுங்க லலியனகே தலைமையில் டிசம்பர் மாதக் கூட்டம் நடைபெற்றது.

24 சபை உறுப்பினர்களைக் கொண்ட நிவித்திகல பிரதேச சபையில் 14 உறுப்பினர்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சி ஏழு உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப படுத்தும் இரண்டு உறுப்பிர்களும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் ஒருவரும் உள்ளனர்.

வரவு செலவை திட்டத்தை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் எதிராக வாக்களித்தார்.

வரவு செலவுத் திட்டம் நடைபெறும் பொழுது சபையில் இரு உறுப்பினர்கள் சமூகமளிக்கவில்லை.

# க.பொ.த.பரீட்சையில் மடுல்கலை பரமேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயம் சாதனை

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் மடுல்கலை பரமேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயம் 80 சதவீத சித்தியுடன் 9A சித்திகளையும் பெற்றுள்ளது. இதனை கொண்டாடும் முகமாக வித்தியாலய அதிபர் சிவநாதன் தலைமையில் மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், பிரஜாசக்தி அபிவிருத்தி திட்டத்தின் பணிப்பாளர் நாயகமான பாரத் அருள்சாமி சிறப்பு அதிதியாக கலந்து கொண்டிருந்தார். அவர் இதன் போது கருத்து தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கண்டி மாவட்டத்தில் மற்றும் மலையகம் எங்கும் மாணவர்களின் திறன் அபிவிருத்திக்கு பல வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளதுடன் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு எம் அனைவருக்குமே ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக அமையவுள்ளது.

அந்தவகையில் மலையக கல்வி வளர்ச்சி வரலாறு காணாத உச்சத்தை எட்ட என்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் எனவும் தெரிவித்திருந்தார்.



இந்நிகழ்வில் 9A சித்திகளைப் பெற்ற மாணவி மெனுஜாவுக்கு பதக்கங்கள் அணிவித்து கேடயம் வழங்கப்பட்டது. இவ்விழாவில் வத்தேகம வலய கல்வி பணிப்பாளர் ஹாசிம் , கல்வி அதிகாரிகள் சக பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மடுல்கலை நகர வர்த்தக சங்கத்தினர், பெற்றோர்கள் மற்றும் ஊர் மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



கண்டி விவேகானந்த தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வில் கண்டி கிறிஸ்த நாதர் ஆலயப்பங்குத்தந்தை அருட்பணி செல்டன் கலந்துகொண்டார்.
(படம்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

## ஸ்டொக்ஹோம் தோட்ட சேவையாளர்கள் பணிபகிஷ்கரிப்பு

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

நோர்வூட் பொலிஸ் பிரிவிலுள்ள ஹொரன பிளான்டேசனுக்கு உரித்தான ஸ்டொக்ஹோம் தோட்டத்தில் தோட்ட சேவையாளர்கள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த சில நாட்களாக ஹொரண பிளான்டேசனுக்கு உரித்தான சாமிமலை ஸ்டொக்ஹோம் தோட்டத்தில் தொழிற்சாலை பிரிவில் வெளிக்கள உத்தியோகத்தரை இடமாற்றம் செய்ய கோரி பணிப்பகிஷ்கரிப்பை தோட்ட தொழிலாளர்கள் மேற்கொண்டனர். தோட்ட நிர்வாகம் அந்த வெளிக்கள உத்தியோகத்தரை இடமாற்றம் செய்தமையால் அந்த தொழிற்சாலை பிரிவிலுள்ள சேவையாளர்கள் 7 பேர் இடமாற்றத்தை கண்டித்து பணிபகிஷ்கரிப்பு செய்து வருகின்றனர். இதனால் அப்பிரிவிலுள்ள தேயிலை தொழிற்சாலை முற்றாக கடந்த மூன்று தினங்களாக பாதிக்கப்பட்டுள்ளது.



பலத்த காற்று காரணமாக பசறை, டெமேரியா, கோணக்கலை மேற்பிரிவு தோட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர்உணவு பொதிகள் நேற்று வழங்கிவைக்கப்பட்டன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானின் நிதியொதுக்கீட்டில் பசறை பிரதேச சபை உறுப்பினர் வேலுரவி மக்களுக்கு நிவாரண பொதிகளை வழங்கி வைத்தார்.
(படம்: லுணுகல நிருபர்)

## டெங்கு நோய் பரவும் அபாயம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினக்கல் அகழ்வின் பின்னர் கைவிடப்படும் குழிகளால் சுற்றாடலுக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகளும் எச்சரிக்கை விடுத்துள்ளன. இரத்தினபுரி மாவட்ட கிராமப்பகுதிகள், ஆற்றங்கரைகள் நீர்நிலைகளை அண்டிய பகுதிகள், கம்பனி நிர்வாகங்களில் இயங்கும் பெருந்தோட்டங்கள், தரிசு நிலங்கள் ஆகியவற்றில் இரத்தினக்கல் அகழ்வு பரவலாக இடம்பெற்று வருகின்றது. இரத்தினக்கல் அகழ்வுகளில் அநேகமானவை சட்டவிரோதமான முறையில் இடம்பெறுவனவாகும். அநேகமாக இரவு வேளைகளில் சட்டவிரோதமான முறையில் குழிகளை தோண்டி விட்டு தப்பிச்செல்வது இவர்களது வழமையாகும். இவ்வாறாக கைவிடப்படும் பெருந்தொகையான குழிகளாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.கவனிப்பாரற்று கிடக்கும் குழிகளில் நீர் மற்றும் கழிவு பொருட்களும் தேங்கி கிடப்பதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிப்பதால் டெங்கு,மலேரியா, மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# கொட்டகலையில் போதைப்பொருளை ஒழிக்க வர்த்தக சங்கம் ஒத்துழைப்பு

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்



கொட்டகலை பகுதியில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் போதைப்பொருள் விற்பனையை முற்றாக ஒழிக்க கொட்டகலை வர்த்தக சங்கம் தீவிரமாகச் செயற்பட்டு வருவதாக கொட்டகலை வர்த்தக சங்க தலைவர் புஸ்பா விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில், இவ்விடயம் சம்பந்தமாக கொட்டகலை வர்த்தக சங்கம், பத்தனை பொலிஸ் நிலையம் மற்றும் கிராமசேவகர்களுடன் இணைந்து பாடசாலை மட்டத்தில் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

முதற்கட்டமாக கடந்த மாதம் புத்திஜீவிகள், சிவில் அமைப்புகள் என பல அமைப்புகள் ஒன்றிணைந்து நுவரெலியா மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகரின் பங்குபற்றுதலுடன் ஆலோசனை கூட்டமொன்றை ஸ்ரீ முத்துவிநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் நடத்தியது.

அக்கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தின் படி கடந்த வாரம் 14ஆம் திகதி நுவரெலியா அதிபயங்கர மருந்து பொருட்கள் கட்டுப்பாட்டு சபை அதிகாரிகளால் திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 18 பாடசாலைகள் ஆசிரியர்களுக்கும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கான தெளிவூட்டல் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

அதனைதொடர்ந்து கொட்டகலை வர்த்தக சங்கத்தின் 14 பேரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவானது பாடசாலை மட்டத்திலும் வெளியிடங்களிலும் போதைபொருட்கள் விற்பனை மற்றும் பாவனையாளர்களை இலக்கு வைத்து விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றது.அக்குழுவில் ஓய்வு பெற்ற உதவிப் பணிப்பாளரான இ.லோகநாதன், வடிவேலு, ஓய்வு பெற்ற கேம்ரிச் கல்லூரியின் அதிபரான சி.ஞானபிரகாசம்,ஓய்வு பெற்ற ஆசிரியர் கலாசாலையின் அதிபர் எஸ்.ஜெயகுமார்,வர்த்தக சங்கம் சார்பில் சமூக செயற்பாட்டாளர் ஆர்.கருப்பையா டீ.எம்.சொக்கலிங்கம், பூவலிங்கம்,இன்னும் பல சமூக ஆர்வளர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் கொட்டகலை பகுதியில் இவ்வாறான போதைப்பொருள் பாவனையை தடுக்க அனைத்து பொதுமக்களும் ஒத்துழைப்பை வழங்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# வெளிநாட்டு உதவிகள் பெறும் சுகாதார மத்திய நிலையங்களால் மக்கள் பாதிப்பு

குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்கள் முறைப்பாடு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு உதவிகள் பெறும் சுகாதார மத்திய நிலையங்களால் குடும்ப நல தாதி உத்தியோகத்தர்களின் குடும்ப சுகாதாரக் கட்டமைப்பு பாதிக்கப்பட்டு வருவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

இதனால் கர்ப்பிணி தாய்மார்களுக்கான உதவிகளும் செயலிழந்து வருவதாக இக்கிராமங்களின் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குடும்ப நலச் சுகாதார உத்தியோகத்தர்கள் முறைப்பாடுகளை தெரிவித்து வருகின்றனர்.

மேற்படி வெளிநாட்டு நிதி உதவி சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமையால் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள தாம் தூர இடங்களை நாடி செல்ல வேண்டிய நிலைமைகள் உருவாகியுள்ளதாக பிரதேச கர்ப்பிணித் தாய்மார்கள் முறைப்பாடு செய்கின்றனர்.

அத்துடன் இந்நிலைமையால் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிகிச்சைகளை வழங்குவதற்கு அவசிய ஆவணங்கள் உபகரணங்களை பாதுகாப்பாக வைக்கக்கூட இந்நிலையங்களில் கிடைப்பதில்லை என குடும்ப நல தாதி உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பான முறைப்பாடுகள் பரவலாக கிடைத்து வருவதனால் இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிப்பதற்காக கமிட்டி ஒன்றை நியமிக்கவுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவள தெரிவித்தார்.

## மலசலகூட வசதியின்மையால் மக்கள் பாதிப்பு

எஹலியகொடை நகரில் பொது மலசலகூட வசதியின்மையால் பொதுமக்கள் தங்களது அவசர தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள நகரிலுள்ள வியாபார நிலைய உரிமையாளர்களின் உதவியை பெற வேண்டியுள்ளதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டினர்.

எஹலியகொடை நகரப்பகுதி பல வருடங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூடம் நகரின் மூளையில் பொது மக்களுக்கு தேடிக்கொள்ள முடியாத இடமொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததாக தெரிவித்த பொதுமக்கள் அவ்விடத்திற்கு அதிக அளவு தூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும் நகருக்கு வருவோர் தெரிவித்தனர்.

# மலையக தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்

ஹற்றன் சுழற்சி நிருபர்

மலையக தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். இது விடயம் சம்பந்தமாக ஆணைக்குழுவொன்று நிறுவப்பட்டு அக்குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் தீர்வு அவசியம்." என இ.தொ.காவின் பிரதித் தலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான கணபதி கணகராஜ் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று (23.12.2022) இடம்பெற்ற ஊடகச்சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுவரெலியாவுக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தைகூட்டி முக்கிய பல விடயங்களை முன் வைத்திருந்தார். இதில் குறிப்பாக தோட்டக் கம்பனிகள் தமது கையிருப்பில் வைத்துள்ள தரிசு நிலங்கள், பயிர்செய்கைக்காக இளைஞர், யுவதிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் எனவும், கம்பனிகளுடனான குத்தகை உடன்படிக்கை இரத்து செய்யப்படும் எனவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். இக்கூற்றை நாம் வரவேற்கின்றோம்.



அதேபோல மலையகம் சம்பந்தமாக ஆணைக்குழுவொன்றை அமைத்து, அந்த ஆணைக்குழுவால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் மலையக தமிழர்களின் அரசியல்சார் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் தேசிய நீரோட்டத்தில் எமது மக்களும் இணையக்கூடும். தமது பதவி காலம் முடிவடைவதற்குள் ஜனாதிபதி இதனை செய்ய வேண்டும். செய்வார் என நம்புகின்றோம்.

அதேவேளை, உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான பூர்வாங்க பணிகளை தேர்தல் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது. கூட்டாகவும், தனித்தும் தேர்தல்களை எதிர்கொண்ட அனுபவம் காங்கிரசுக்கு உள்ளது. எனவே, நேரகாலத்துக்கு ஏற்ற வகையில் தேர்தல் சம்பந்தமாக எமது கட்சியின் தேசிய சபைக்கூடி முடிவை எடுக்கும்." என்றார்.

# நகர்வலம்



## எப்பாவல சிறுவன் கடத்தல்;
# சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

எப்பாவல பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கிரலோகம கெட்டதிவுல பகுதியில் வசிக்கும் 09 வயது சிறுவன் கடத்தப்பட்டு நேற்றுடன் (23) ஐந்து நாட்களாகியும் சிறுவனையோ கடத்தப்பட்டதாக கூறப்படும் நபர் தொடர்பிலோ இதுவரைக்கும் ஊர்ஜிதமான எந்தவொரு தகவலும் கிடைக்கவைல்லையென பெற்றோர் தெரிவித்தனர்.

சிறுவனை ஏமாற்றி கடத்திச் சென்றுள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் 45 வயதுடைய மின்சார உபகரணங்கள் திருத்துனர் ஒருவரை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

இல: 16 கெட்டதிவுல கிரலோகம பகுதியைச் சேர்ந்த கிரலோகம சுபோதி மகா வித்தியாலயத்தில் 4 ம் தரத்தில் கல்வி பயிலும் மாணவனே கடத்தப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் அப்பிரதேசத்தில் மின் உபகரணங்களை திருத்துனர் ஒருவருடன் நட்பாக இருந்ததாகவும் அவரே சிறுவனைக் கடத்திச் சென்றிருக்கலாம் எனவும் கடத்தப்பட்ட சிறுவனின் பெற்றோர் எப்பாவல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த 19 ம் திகதி இரவு 8.30 மணிக்குப் பின்னர் குறித்த சிறுவன் வீட்டில் இல்லையெனவும் தேடிப் பார்த்த போதும் அவரைப்பற்றிய எந்த தகவலும் கிடைக்கவில்லையெனவும் சிறுவனின் தாய் தெரிவித்தார்.

சிறுவனை கடத்திச் சென்ற நபரின் புகைப்படம் கிடைத்துள்ளதுடன் அந்நபர் பற்றிய தகவல் கிடைத்தால் 025,2249122 இலக்க தொலைபேசி ஊடாக எப்பாவல பொலிஸ் நிலையத்திற்கு அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறும் பொலிசார் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



உடப்பு ஸ்ரீ கிருஷ்ணா இளைஞர் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க சவர்க்காரம் செய்யும் கைத்தொழில் பயிற்சி ஒன்று உடப்பு 6ம் வட்டாரத்தில் வெள்ளிக்கிழமை (23) இடம்பெற்றது. முந்தல் பிரதேச செயலகத்தின் ஊடாக இந்த வேலைத்திட்டம் இடம்பெற்றது. இதில் பெண்கள் சிலர் கலந்துகொண்டு பயனடைந்தனர். படம்: உடப்பு குறூப் நிருபர்

# அனுராதபுரம் மாவட்ட அஹதிய்யா வகுப்புக்கள் ஆரம்பிப்பது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் அஹதிய்யா வகுப்புக்கள் ஆரம்பிப்பது சம்பந்தமான விழிப்புணர்வு கூட்டங்கள் இரு நாட்கள் நடைபெறவுள்ளன.

இன்றும் நாளையும் (24,25) அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளன நிர்வாக சபை உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அனுராதபுரம் மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் செயலாளர் அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலை அதிபர் எம்.ஆர்.எம்.ரனீஸ் தெரிவித்தார்.

எல்லா முஸ்லிம் பாடசாலைகளிலும் அஹதிய்யா பாடசாலைகள் ஏன் ஆரம்பிக்கப்பட வேண்டும். அஹதிய்யா வகுப்புக்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வகையில் அதன் முக்கியத்துவம், என்ற தொனிப்பொருளில் இந்த விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடைபெறும்.

இன்று 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மரதன்கடவல அந்நஹ்லா மத்திய நிலையத்திலும் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு கஹட்டகஸ்திஹிலிய முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு அனுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலையிலும் இந்த விழிப்புணர்வு கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள் பாடசாலை ஆசிரியர்கள் பள்ளிவாசல் நிர்வாகிகள்,அஹதிய்யா பாடசாலை அதிபர்கள், அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்கள்,உலமாக்கள்,கல்வியலாளர்கள்,பழைய மாணவர்கள்,நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக அனுராதபுரம் மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் செயலாளர் எம்.ஆர்.எம்.ரனீஸ் தெரிவித்தார்.

# புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

**மாவத்தகம தினகரன் நிருபர்**



புலம்பெயர் தொழிலாளர்களின் ஊதியம், சமூகப் பாதுகாப்பு, பாரபட்சம் தொடர்பில் கவனம் செலுத்த

இந்நாட்டிலுள்ள சிவில் சமூகம், அரசாங்கம் மற்றும் இவ்விடயத்தோடு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களும் இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று முன்னாள் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி தெரிவித்தார்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை, கொழும்பு சமூக அபிவிருத்தி நிறுவனம், பதுளை வலுசக்தி நிறுவனம், அம்பாறை சொஆட் அமைப்பு, மட்டக்களப்பு சவிய அபிவிருத்தி அமைப்பு ஆகியன இணைந்து சர்வதேச புலம்பெயர் தினத்தை முன்னிட்டு புலம்பெயர் ஊழியர்களுக்கான விழிப்புணர்வு ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை அகில இலங்கை வை. எம். எம். பேரவையின் ஏற்பாட்டில் கண்டி கிளை அலுலகத்தில் நடத்தினர்.

இதன் போதே முன்னாள் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி த இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

இந்த ஊடக மாநாட்டில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட், பொருளாளர் எம். எம். நிவ்ராஸ், சர்வதேச வை. எம். எம். ஏ. பேரவையின் இலங்கைக்கான செயற்பாட்டாளர் சந்தீப சுதார உள்ளிட்டவர்கள் இம் ஊடக மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

# கஞ்சா செடியை வளர்த்த இளம் விவசாயி கைது

**திறப்பனை தினகரன் நிருபர்**


கஞ்சா செடியை தனது தோட்டத்தில் பயிரிட்டு, பராமரித்து வந்த நபர் ஒருவரை (21) மாலை திறப்பனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கல்குளம் குளத்து பகுதியில் வசிப்பவர் எனவும், 28 வயதுடைய இளம் விவசாயி ஒருவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதை தவிர 01 கிராமும் 910 மில்லி கிராம் அளவு கொண்ட கஞ்சாவை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் திறப்பனை கனுமுல்லேகம பகுதியைச் சேர்ந்த 53 வயது நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இரண்டு சந்தேக நபர்களும் நேற்று முன்தினம் (22) அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவிருந்தனர். சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை திறப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கின் குரல்



# நத்தாரையிட்டு அம்பாறை வர்த்தக நிலையங்களில் விசேட சோதனை

**ஒலுவில் விசேட நிருபர்**

எதிர்வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் விசேட சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ.றிஸ்லி தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டபோதிலும், சில வர்த்தக நிலையங்களில் கூடுதலான விலைக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், கட்டுப்பாட்டு விலையை மீறி அத்தியாவசிய உணவுப் பொருட்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றத்தினூடாக சட்ட நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

# ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு

**கல்முனை விசேட நிருபர்**



சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் கடந்த 8 வருடங்களாக ஆரம்பக்கல்வி ஆசிரியையாகக் கடமையாற்றிய நூர் ஜஹான் பீவி அலி அக்பர் தனது 56ஆவது வயதில் அப்பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

1992ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்று சாய்ந்தமருது அல்ஜலால் வித்தியாலயத்தில் தனது கல்விப் பணியை ஆரம்பித்த அவர், 30 வருட காலம் பல்வேறு பாடசாலைகளிலும் ஆசிரியையாகக் பணியாற்றியுள்ளார்.

இந்நிலையில், இம்மாதம் 15ஆம் திகதி ஓய்வுபெற்ற அவருக்கு சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் அண்மையில் பாடசாலை சமூகத்தினால் பிரியாவிடையளிக்கப்பட்டது.

# 'அனாமிகா' பண்பாட்டு மையத்தின் நிகழ்வுகள்

**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

மூதூர் கிழக்கின் சேனையூர் கிராமத்தில் இயங்கி வரும் 'அனாமிகா' பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில், 'அனாமிகா நினைவுப் பேருரையும் கலை இலக்கிய கூடலும்' நிகழ்வு, திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி மட்டக்களப்பிலும் 29ஆம் திகதி சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தின் அபிராமி களரியிலும் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதில் சுவாமி விபுலானந்தர் கற்கை நிறுவகத்தின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி பிரியா ஜெகதீஸ்வரன் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

60 வயதுக்கு மேற்பட்ட பல்கலை மாமணிகள், நடிகமணி, நல்லூடகர், இசைக்கோ, இசையரசி, ஆடல் வல்லாள், இசைமாமணி, கவிச்சுடர், சிற்பக்கலா வித்தகர் போன்ற முதுகலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதன்போது கடந்த 2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சா/த பரீட்சையில் 9 மற்றும் 8 ஏ தர சித்தி பெற்ற மாணவர்கள், மருத்துவத்துறைக்கு தெரிவாகிய மாணவி ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# மட்டக்களப்பு மாநகர சபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வாலிபர் முன்னணியின் உறுப்பினர் வி.தினேஷ் குமாருக்கான நியமனக் கடிதத்தை அம்மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் வழங்கி வைத்தார்.

ஏற்கனவே மாநகர சபைக்கான கறுவேப்பங்கேணி வட்டாரத்தின் உறுப்பினராக இருந்த சி.மேகராஜ் அப்பதவியிலிருந்து விலகியமையினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இப்புதிய உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் நேற்று முன்தினம் (22) வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், மாநகர சபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# மாணவர்களுக்கு கிறிஸ்மஸ் தாத்தாவின் அன்பளிப்பு!



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

நத்தார் பண்டிகையை முன்னிட்டு தம்பட்டை அறுவடை பணி திருச்சபையின் ஏற்பாட்டில் திருக்கோவில், ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று (23) வழங்கி வைக்கப்பட்டன.

தம்பட்டை அறுவடை பணி திருச்சபையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, 70 மாணவர்களுக்கு கிறிஸ்மஸ் தாத்தாவினால் பரிசுகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, மாணவர்களின் பல்வேறு கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன.

# நாவிதன்வெளியில் ஓவியம் வரைதல் பயிற்சிப் பட்டறை



**காரைதீவு குறூப் நிருபர்**

நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் சித்திர பாட மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஓவியம் வரைதல் பயிற்சிப்பட்டறையை, இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த உலகப் புகழ்பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் நடத்தினார்.

நாவிதன்வெளி பிரதேசத்துக்கு நேற்று முன்தினம் (22) வருகை தந்த நிலையிலேயே, அவர் இப்பயிற்சிப் பட்டறையை நடத்தினார்.

'அறநெறியானது ஒழுக்கமுள்ள மனிதனை உருவாக்கும், 'அறநெறியில் ஓவியங்கள் ஊடாக இறைவனை காணுதல்' எனும் தலைப்பில் அவர் இப்பயிற்சிப்பட்டறையை நடத்தினார்.

உலகப் புகழ்பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் பற்றிய அறிமுகவுரையை அம்பாறை மாவட்ட இந்துக் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜீ நிகழ்த்தினார்.

இதேவேளை, அறநெறி வகுப்புகளுக்கு இதுவரையில் செல்லாத மாணவர்களை அறநெறிக்கு ஈர்க்கும் வகையில் ஓவியர் மு.பத்மவாசனின் உரையும் அமைந்திருந்தது.

# கல்லடியில் வருடாந்த ஒளி விழா

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பின் கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய மறைப் பாடசாலையின் வருடாந்த ஒளி விழா, அருட்தந்தை லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு அதிதியாக அருட்தந்தை அனிஸ்டன் மொறாயஸ் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது, அதிதிகளுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், மற்றும் இறை வணக்கத்துடன் விழா ஆரம்பமாகியது. மறைக்கல்வி மாணவர்களின் கலைப்படைப்புகள் அரங்கை அலங்கரித்திருந்ததுடன், அதிதிகள் உரை இடம்பெற்று, மறைக்கல்வி மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# ஐ.பி.எல்.: சாம் கரனை சாதனை விலைக்கு வாங்கியது பஞ்சாப்




கொச்சின் நகரில் நேற்று (23) நடைபெற்ற இந்திய பிரீதியர் லீக் ஏலத்தில் இங்கிலாந்து சகலதுறை வீரர் சாம் கரன் அதிக விலையாக இந்திய நாணயப்படி 18.5 ரூபாவுக்கு விலைபோயுள்ளார்.

இதன்மூலம் அவர் ஐ.பி.எல் வரலாற்றில் அதிக விலைபோன கிறிஸ் மொரிசின் (16.25 கோடி ரூபா) சாதனையை முறியடித்துள்ளார். அவரை வாங்குவதற்கு மும்பை இந்தியன்ஸ் அணி கடைசி வரை போட்டியிட்டபோதும் பஞ்சாம் கிங்ஸ் அணிக்கே அவர் விலைபோனார்.

அதேபோன்று சகலதுறை வீரர் கெமரூன் கிரீன் அதிக விலைபோன ஆஸி. வீரராக பதிவானார். அவரை வாங்க கடுமையான போட்டி நிலவிய நிலையில் மும்பை இந்தியன்ஸ் 17.25 கோடி ரூபாவுக்கு வாங்கியது.

# தேசிய விளையாட்டு விழா: கல்முனை சாஹிரா தங்கம்

**மாளிகைக்காடு குறூப், பொலிவேரியன் நிருபர்கள்**



இலங்கை அரச சேவை விளையாட்டு சங்கம் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் இவ்வாரம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தேசிய விளையாட்டு விழாவில் கலந்து கொண்ட கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி ஆசிரியர் குழாம் தங்கப்பதக்கங்களை சுவீகரித்தது.

கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் எம்.வை.எம். றகீப் 110 மீற்றர் தடை தாண்டி ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தை வென்றதோடு 100 மற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிகளில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றார்.

மேலும் கல்வி திணைக்களத்தின் சார்பாக போட்டியில் கலந்து கொண்ட கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவர்களும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுமான எம்.யூ.ஏ. சம்லி 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடத்தையும், ஏ.ஜி.எம். மஸ்பூத் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

# தனது சுழல்பந்து பாணியை மேம்படுத்த யாழ். நட்சத்திரம் வியாஸ்காந்த் திட்டம்




ஜப்னா கிங்ஸ் அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளர் விஜயகாந்த் வியாஸ்காந்த், தனது பந்துவீச்சு பாணியை மேலும் மேம்படுத்தி சுழற்பந்து வீச்சாளராக சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு பெருமை சேர்க்க எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

லங்கா பிரீமியர் லீக் தொடரில் கண்டி பல்கன்ஸ் அணிக்கு எதிரான முதல் தகுதிகாண் போட்டியில் வியாஸ்காந்த் 3 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதை வென்ற பின் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

“நான் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும், இங்கிலாந்திலும் சுழற்பந்து வீச அதிகம் பாடுபட்டு உச்ச அர்ப்பணிப்புடன் பயிற்சி பெற்றிருக்கிறேன். அதேபோன்று எதிர்காலத்தில் கழகங்களுக்கு இடையே தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்று உச்ச திறமையை காண்பிப்பது எனது எதிர்பார்ப்பாகும். அதன்மூலம் நாட்டுக்கு பெருமை சேர்க்க வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்புகிறேன்” என்று வியாஸ்காந்த் குறிப்பிட்டார்.

இதில் அவர் மேலும் கூறும் போது, “யாழ்ப்பாணத்தில் பல பயிற்சியாளர்கள் இருக்கிறார்கள். நான் அங்கு இன்னும் பயிற்சி பெறுகிறேன். ஆனால் கொழும்பில் பயிற்சி பெறும் போது இங்கு இருக்கின்ற வசதிகள் அதிகம் பயன் தருகிறது. எதிர்வரும் கழகங்களுக்கு இடையிலான போட்டிகளில் தமிழ் யூனியன் அணிக்காக மீண்டும் பங்கேற்று திறமையை வெளிப்படுத்த நான் எதிர்பார்த்துள்ளேன்” என்றார்.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான வீரர் ஆவதற்கு அதிக அர்ப்பணிப்பு மற்றும் கடுமையாக பயிற்சிகளை பெற வேண்டி இருப்பதாகக் குறிப்பிடும் வியாஸ்காந்த் அவை அனைத்தையும் வெற்றி கொள்வதற்கு தாம் எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ். மத்திய கல்லுளரியைச் சேர்ந்த 21 வயதான விஜயகாந்த் வியாஸ்காந்த் லங்கா பிரீதியர் லீக் தொடரில் ஜப்னா அணிக்காக கடந்த மூன்று தொடர்களிலும் ஆடி வருகிறார்.

## பி.ஃ.பா தரவரிசை:

# உலகக் கிண்ணத்தை வென்றாலும் பிரேசிலிடம் ஆர்ஜன்டீன அணிக்கு தொடர்ந்தும் பின்னடைவு

பிஃபா உலகக் கிண்ணத்தை ஆர்ஜன்டீனா கைப்பற்றியபோதும் புதுப்பிக்கப்பட்ட உலக கால்பந்து தரவரிசையில் அந்த அணியால் முதலிடத்தில் இருக்கும் பிரேசிலை பின்தள்ள முடியாமல் போயுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட புதிய தரவரிசையின்படி ஆர்ஜன்டீனா ஒரு இடம் முன்னேற்றம் கண்டு இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. எனினும் குறுகிய புள்ளிகள் வித்தியாசத்தில் பிரேசில் அணி முதலிடத்தை தக்கவைத்துள்ளது.

இதில் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆர்ஜன்டீனாவிடம் தோற்ற பிரான்ஸ் அணி தரவரிசையில் ஒரு இடம் முன்னேற்றம் கண்டு மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது.

இதனால் கட்டாரில் நடந்த உலகக் கிண்ணத்தில் நொக் அவுட் சுற்றுக்குக் கூட முன்னேறாமல் வெளியேறிய பெல்ஜியம் அணி 2 இடங்கள் சரிந்து 4ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இங்கிலாந்து எந்த மாற்றமும் இன்றி ஐந்தாவது இடத்தை தக்கவைத்துள்ளது.

உலகக் கிண்ண அரையிறுதி வரை முன்னேற்றம் கண்ட குரோசியா 5 இடங்கள் முன்னேறி 7 ஆவது இடத்தையும் பெரும் அதிர்ச்சி முடிவுகளைத் தந்து முதல் நான்கு அணிகளுக்குள் வந்த மொரோக்கோ 11 இடங்கள் ஏற்றம் கண்டு 11 ஆவது இடத்தையும் பெற்றன.

இதில் மொரோக்கோ அணி பிஃபா தரவரிசையில் பெற்ற மிகச் சிறந்த தரநிலையாக இது உள்ளது.

அதேபோன்று உலகக் கிண்ணத்தில் சிறப்பாகச் செயற்பட்ட அவுஸ்திரேலியா மற்றும் கெமரூன் அணிகள் முறையே 11 மற்றும் 10 இடங்கள் உயர்வு பெற்று 22 மற்றும் 33 ஆவது இடங்களை பெற்றன.



குழுநிலைப் போட்டியில் ஆர்ஜன்டீனாவை வீழ்த்திய சவூதி அரேபியா 2 இடங்கள் முன்னேறி 49 ஆவது இடத்தைப் பெற்றது.

வெளியிடப்பட்டிருக்கும் புதிய தரவரிசையில் ஏழு அணிகள் பத்துக்கும் அதிகமான இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ளன. இதில் காம்பிய 24 இடங்கள் முன்னேறி 126 ஆவது இடத்தையும், கொஸ்டாரிக்கா 17 இடங்கள் உயர்ந்து 32 ஆவது இடத்தையும், இக்வாடோரியல் கினியா 16 இடங்கள் உயர்ந்து 98ஆவது இடத்தையும் இந்தோனேசியா 13 இடங்கள் ஏற்றம் கண்டு 151 ஆவது இடத்தையும் கியூபா 11 இடங்கள் முன்னேறி 168ஆவது இடத்தையும் பெற்றன.

பிஃபா தரவரிசையில் இலங்கை கால்பந்து அணி 207ஆவது இடத்தில் இருப்பதோடு அது கடைசி இடத்திற்கு ஐந்து இடங்களே முன்னால் உள்ளது.

# உலகக் கிண்ணத்தை முத்தமிட்ட பிரபலம் பற்றி பி.ஃ.பா விசாரணை



கட்டாரில் நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டி முடிவின் பின்னர் பிரபல சமையல் நிபுணர் சோல்ட் பே மற்றும் மேலும் பலர் மைதானத்திற்குள் தேவையற்ற முறையில் நுழைந்தது பற்றி சர்வதேச கால்பந்து சம்மேளனம் விசாரணை நடத்தி வருகிறது.

ஆர்ஜன்டீன வீரர்கள் உலகக் கிண்ணத்தை வென்று கொண்டாட்டத்தில் இருந்தபோது துருக்கி நாட்டு சமையல் நிபுணரான பே உலகக் கிண்ணத்தை வைத்திருப்பது மற்றும் அதனை முத்தமிடும் படங்கள் வெளியாகியுள்ளன.

தொடரை வென்ற அணியினர், பிஃபா அதிகாரிகள் மற்றும் அரச தலைவர்கள் உட்பட குறிப்பிட்ட சிலருக்கே கிண்ணத்தை ஏந்தி இருக்க முடியும் என்று பிஃபா விதி குறிப்பிடுகிறது.

“டிசம்பர் 18 ஆம் திகதி லுசைலா அரங்கில் நிறைவு விழா முடிந்த பின்னர் தனிநபர்கள் எவ்வாறு மைதானத்திற்குள் நுழைந்தார்கள் என்பது பற்றி மீளாய்வு ஒன்றுக்குப் பின்னர் பிஃபா விசாரணை நடத்தி வருகிறது” என்று பிஃபாவின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

“முறையான உள்ளக நடவடிக்கை எடுக்கப்படும்” என்று அவர் பி.பி.சி தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

சோல்ட் பே ஆடம்பர இறைச்சி உணவகங்களின் உரிமையாளராவார். மெஸ்ஸி, கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் டேவிட் பெக்கம் உட்பட பல முன்னாள் மற்றும் தற்போதைய கால்பந்து வீரர்கள் அவரது உணவகங்களில் உணவு உட்கொள்பவர்களாக உள்ளனர்.

# இலங்கை கால்பந்து நிறுவன தலைமைக்கு அறுவர் போட்டி

இலங்கை கால்பந்து நிறுவன தலைமை பதவிக்கான போட்டியில் முன்னாள் தலைவர் உமர் ஜஸ்வர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ ரங்கா உட்பட ஆறு பேர் போட்டியிடுகின்றனர். இந்தத் தேர்தல் வரும் ஜனவரி 14ஆம் திகதி கொழும்பில் உள்ள விளையாட்டு அமைச்சு கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 10 பதவிகளுக்காக நடத்தப்படும் தேர்தலில் 35 வேட்புமனுக்கள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இது கால்பந்து தேர்தலில் பதிவான அதிக வேட்பாளர் எண்ணிக்கையாக உள்ளது. இதன்படி ஐந்து உப தலைவர் பதவிகளுக்கு 13 பேரும், செயலாளர் பதவிக்கு நால்வரும், பிரதி பொது செயலாளர் (தொழில்நுட்பம்) பதவிக்கு நால்வரும், பிரதிப் பொதுச் செயலாளர் (நிர்வாகம்) பதவிக்கு ஐவரும், பொருளாளர் பதவிக்கு 3 பேரும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

இதில் உபாலி ஹேவகே, எமானுவேல் ஆர்ன்ல்ட், ஜகத் டி சில்வா மற்றும் சம்பத் பெரேரா ஆகியோரே தலைமை பதவிக்கு போட்டியிடும் ஏனையவர்களாவர்.



## எல்.பி.எல் தொடர்:

# 52 வெளிநாட்டு வீரர்களில் 22 பேர் பங்கேற்கவில்லை

லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்) டி20 கிரிக்கெட் தொடருக்கு ஒவ்வொரு அணிகளாலும் 52 வெளிநாட்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டபோதும் 22 வீரர்கள் இம்முறை தொடரில் பங்கேற்கவில்லை.

இதில் கொழும்பு ஸ்டார்ஸ் அணி 09 வெளிநாட்டு வீரர்களை தேர்வு செய்தபோதும் 03 வீரர்கள் விலகியுள்ளனர். தம்புள்ள அவுரா அணியில் 12 வெளிநாட்டு வீரர்கள் சேர்க்கப்பட்டபோதும் பாதி அளவானவர்களே போட்டியில் பங்கேற்றனர்.

அதேபோன்று கோல் கிளாடியேட்டர்ஸ் அணிக்காக 11



வெளிநாட்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டபோதும் ஐவர் தொடரில் இருந்து வெளியேறியுள்ளனர். ஜப்னா கிங்ஸ் அணியிலும் 11 வெளிநாட்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்ட நிலையில் ஆறு வீரர்களே இடம்பெற்றுள்ளனர்.

கண்டி பெல்கன்ஸ் அணியில் 09 வெளிநாட்டு வீரர்கள் இடம் பெற்ற நிலையில் மூவர் விலகினர்.

இதில் பங்கேற்ற வெளிநாட்டு விரர்களில் கணிசமான வீரர்கள் ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘ஆண்டின் வங்கி’ விருதை ஐக்கிய இராச்சியத்தின் த பேங்கரிடமிருந்து வென்ற கொமர்ஷல் வங்கி

வங்கித் துறையில் ஆஸ்கார் விருதுக்கு சமமாகக் கருதப்படும் இலங்கையின் ‘ஆண்டுக்கான வங்கி’ என்ற மகுடத்தை ஐக்கிய இராச்சியத்தின் த பேங்கர் சஞ்சிகை கொமர்ஷல் வங்கிக்கு சூட்டியுள்ளது.

இந்த கீர்த்திமிக்க விருதை கொமர்ஷல் வங்கி வென்றுள்ளமை இது 12வது சந்தர்ப்பமாகும். வருவாயை வழங்கக் கூடிய வங்கியின் திறன், மூலோபாய நன்மைகளை அடைந்து கொள்ளல், வங்கித் தொழில்துறையின் தரத்தைப் பேணி ஆற்றல் மிக்க சேவைகளை வழங்கல் என்பனவற்றுக்கான ஒரு அங்கீகாரமாகவே இந்த சிறப்பு விருது வழங்கப்படுகின்றது.



ஆண்டுக்கான வங்கி என்ற மகுடம் நிதி நிறுவனங்கள் வெளிப்படுத்தும் வளர்ச்சி மற்றும் ஆற்றல், மூலோபாய முன்முயற்சிகள், தொழில்நுட்ப கண்டு பிடிப்புக்கள், புதிய அல்லது மேம்படுத்தப்பட்ட சேவைகள் மற்றும் உற்பத்திகள், மற்றும் துறைசார் குறிப்பிடத்தக்க சாதனைகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டே சூட்டப்படுகின்றது.

“12 தடவைகள் ஆண்டின் வங்கி என்ற மகுடம் சூட்டப்பட்டுள்ளமை ஏனைய தரங்கள் எல்லாவற்றிலும் பார்க்க ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்” என்று கூறினார் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க. “2022ல் இந்த மகுடத்தை வென்றமை தற்போது நிலவுகின்ற சூழ்நிலைகளின் பின்னணியில் மிக முக்கியமானதோர் அம்சமாகும். தீவிர நெருக்குதலின் மத்தியில் எமது செயற்பாடு கொமர்ஷல் வங்கியின் ஒட்டு மொத்த குழுவினருக்குமான ஒரு கௌரவமாகும். இந்தக் குழு தொடர்ச்சியாக தனது பணிகளை ஆற்றி இவ்வாண்டில் பல விருதுகளை வெல்ல வழியமைத்துள்ளது” என்று அவர் மேலும் கூறினார்.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க (மத்தியில்) விருதை பெற்றுக் கொள்கிறார்.




# படைப்பாற்றல், நம்பகத்தன்மையை முன்னிலைப்படுத்தி TikTok இல் பிரபலமான நட்சத்திரமானார் லோச்சி

ஒரு நடுத்தரக் குடும்பத்தில் வளர்ந்த @lochanajayakodi தனது கனவை நனவாக்கிய இலங்கைப் பெண் ஆவார். லோச்சி ஒரு நடிகையாக விரும்பினாலும், அவர் சிவப்பு கம்பளத்தில் நடக்க வேண்டும் என்று கனவு கண்டார்.




தனிப்பட்ட வாழ்க்கையில் பல பின்னடைவுகளைச் சந்தித்தாலும், லோச்சனா பன்முகத் திறமை கொண்ட பெண்மணி. அவர் ஒரு பிரபலமான சமூக செல்வாக்கு செலுத்துபவர், உள்ளடக்கத்தை உருவாக்குபவர், யூடியூபர், ஆர்வலர் மற்றும் அவரது சொந்த நிறுவனத்தின் பணிப்பாளராகவும் ஆனார்.

எப்பொழுதும் மாறிவரும் சமூக மேம்பாட்டு வடிவமைப்பு ஆக்கங்கள் மற்றும் TikTok வடிவமைப்புக்கள் காரணமாக @lochanajayakodi ஐ சுற்றி 1.1Mn மற்றும் 15.7Mn பின்தொடர்பவர்களைக் (Followers) கொண்டுள்ளார், தரமான உள்ளடக்கத்தை வழங்குவதில் லோச்சனாவின் அர்ப்பணிப்புதான் இன்றும் நம்மில் பலர் அவரை விரும்புவதற்கு முக்கியக் காரணம்.

லோச்சனா என்பவர் யார், உங்கள் தனிப்பட்ட தகவல்கள் என்ன?

லோச்சனா என்பது, வாழ்கையை கொண்டு நடத்துவதற்கு உழைத்து வரும் இரு பெற்றோர்களைக் கொண்ட ஒரு நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இலங்கைப் பெண், நான் குடும்பத்தில் மூத்த மகள் எனக்கு இரண்டு தங்கைகள் உள்ளனர்.

நான் உயர்நிலைப் பள்ளியை முடித்தபோது என் அம்மா ஒரு அரிய நுரையீரல் நோயால் காலமானார். பின்னர் என் இரண்டு தங்கைகளின் பொறுப்பை நான் ஏற்க வேண்டியிருந்தது. எனது சகோதரிகளின் கல்விக்கான நிதிப் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டதால் இந்தக் காலகட்டத்தில் எனது கல்வியைத் தவறவிட்டேன். படிப்பை பாதியில் நிறுத்தினாலும், நடனத்தின் மீதுள்ள ஆர்வத்தைத் தொடரவும், அதன் மூலம் பணம் சம்பாதிக்கவும் முடிந்தது. உண்மையில், நான் ஒரு சான்றளிக்கப்பட்ட Zumba பயிற்றுவிப்பாளர் மற்றும் விருது பெற்ற லத்தீன் நடனக் கலைஞர்.

# கிறிஸ்மஸை முன்னிட்டு புதிய பிரசார வீடியோ பண்டிகை பொதியை வெளியிட்டது PEPSI

கிறிஸ்மஸ் பண்டிகையின் விசேட பிரசாரத்துடன் பண்டிகைக் கொண்டாட்டத்தில் ரீங்காரம் செய்யும் Pepsi, அதன் புதிய பிரசார வீடியோவை வெளியிட்டுள்ளது. Pepsi அனைத்து பருவங்களிலும், குறிப்பாக கொண்டாட்டங்களிலும் பொதுவான ஒரு பானமாக இருக்கிறது என்பதை, கிறிஸ்மஸின் மகிழ்ச்சியான நேரத்தை மிகச்சரியாக எடுத்துக் காட்டும் வகையில் இது அமைந்துள்ளது. கிறிஸ்மஸின் உயர்ந்த சின்னமான நத்தார் தாத்தா மற்றும் மற்றும் அதன் வர்த்தகநாம உயர் மதிப்பைக் கொண்ட SWAG உடன் இணைந்து, பண்டிகையை உள்வாங்கி ஈர்க்கப்பட்ட, மட்டுப்படுத்தப்பட்ட வகையிலான PET போத்தல் தயாரிப்புகளையும் Pepsi அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த கலகலப்பான Pepsi பிரசார வீடியோவானது, அனைவருக்கும் பிடித்த நத்தார் தாத்தா, Pepsi Cool உடையில், விமான நிலையத்திற்கு நுழைவதில் இருந்து ஆரம்பிக்கிறது. அங்கு விமான நிலைய ஊழியர்கள் நத்தார் தாத்தாவின் உன்னதமான வட துருவத்திலுள்ள, வழக்கத்திற்கு மாற்றமான இல்லத்தை பற்றி அறிந்து திகைத்து நிற்கிறார்கள். இந்த ஆச்சரியமான முகங்களைக் கவனித்த நத்தார் தாத்தா, தனது வசீகரத்தையும் மந்திரத்தையும் பயன்படுத்தி, Pepsi போத்தலுக்கு ஊடாக, அனைவரையும் மயக்கும் அதிசய உலகத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

நத்தார் தாத்தா மட்டுப்படுத்தப்பட்ட தயாரிப்பு கிறிஸ்மஸ் பொதியிலிருந்து Pepsi போத்தலை பருகுவதைத் தொடர்ந்து, ஒவ்வொருவரும் தங்களுக்குத் தானே முந்திக் கொண்டு ஒரு போத்தலைப் பெறுவதற்கு ஓடி வருவதை அடுத்து இந்த வீடியோ நிறைவுக்கு வருகிறது.

# குழந்தை வளர்ப்பு விழிப்புணர்வு, போசாக்கு உணவுகள் வழங்கிய பேபி செரமி

இலங்கையின் முன்னணி மற்றும் மிகவும் விரும்பப்படும் குழந்தை பராமரிப்பு வர்த்தக நாமமான Baby Cheramy, கடந்த 2022 ஓகஸ்ட் 15 19 வரை மாத்தறை மாவட்டத்தில் அதன் பெற்றோர் கிளினிக் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தது. கொட்டபொல, ஊருபொக்க, மொரவக்க, ககெனதுர, வெலிகம, வெலிபிட்டிய, ஹக்மன, கிரிந்த உள்ளிட்ட பிரதேசங்களை உள்ளடக்கியதாக இது இடம்பெற்றது. இந்த பெற்றோர் கிளினிக்குகள் குழந்தை பராமரிப்பு, ஆரம்ப குழந்தைப் பருவ பராமரிப்பு மேம்பாடு மற்றும் இணைந்த பெற்றோர் வளர்ப்பு ஆகியவற்றில் பெற்றோருக்கு அறிவூட்டுகின்றன. தற்போதைய சவால்களுக்கு மத்தியில் குழந்தைகளின் உடல், மன, நடத்தை ரீதியான வளர்ச்சிக்கான சிறந்த ஊட்டச்சத்தை உறுதி செய்வதை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றிய பயனுள்ள அறிவும் இதன்போது வழங்கப்பட்டது.



பெற்றோர் கிளினிக்கின் நிறைவில், தாய்மார்களுக்கு பெறுமதியான பேபி செரமி பரிசுப் பொதி, சீலிடப்பட்ட போசாக்கான காலை உணவுப் பொதி, பசும் பால் பொதிகளுடன் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட கர்ப்பம் மற்றும் குழந்தை பராமரிப்பு தொடர்பான நூல் ஆகியன பரிசாக வழங்கப்பட்டன.

தாய் சேய் பராமரிப்பில் அனுபவம் வாய்ந்த நிபுணர்களைக் கொண்ட நிபுணர் வளக் குழுவினால், மாத்தறை பெற்றோர் கிளினிக்கில் இது தொடர்பான விளக்கங்கள் இடம்பெற்றன. குழந்தை பராமரிப்பு மற்றும் ஆரம்ப குழந்தை பருவ பராமரிப்பு மேம்பாடு குறித்து, தாய் சேய் நல ஆலோசகர் ஷியாமலி பத்திரகே விளக்கமளித்தார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் இசைப் பணிப்பாளர் ஜகத் வட்டவல மற்றும் எல்பிட்டிய வலயக் கல்வி அலுவலகத்தின் அழகியல் கற்பித்தல் பயிற்றுவிப்பாளர் ஸ்வர்ணா வட்டவல ஆகியோரால் இசை தெரபி அமர்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்ட 6,000 குடும்பங்களை மேம்படுத்த உதவும் Coca-Cola அறக்கட்டளை

CocaCola அறக்கட்டளையானது பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள 6,000 இலங்கைக் குடும்பங்களுக்குத் தேவையான உலர் உணவுகளை வழங்கும் ‘Say We Care’ முயற்சியின் மூலம் நாடுமுழுவதும் அத்தியாவசிய பொதிகளை வழங்கும் திட்டத்திற்கு நிதியளிக்க முன்வந்துள்ளது.




இந்த முன்முயற்சியில் நாடு முழுவதுமுள்ள மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அதிக பாதிப்புக்குள்ளான சில சமூகங்களுக்கு அண்ணளவாக நிவாரணப் பொதிகளை இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும் வகையில் விநியோகிக்கவுள்ளோம். கம்பஹா, களுத்துறை, கொழும்பு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, மொனராகலை மற்றும் நுவரெலியா ஆகிய ஒன்பது மாவட்டங்களில் இத்தகைய பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உள்ளன. சமூக சேவைகள் அமைச்சின் கீழ் உள்ள தன்னார்வ சமூக சேவைகள் அமைப்பு மற்றும் ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள பல்வேறு உள்ளூராட்சி அதிகார சபைகளின் செயற்பாட்டாளர் சேவாலங்கா அறக்கட்டளையின் உதவியுடன் இந்த குடும்பங்கள் அனைத்தும் திரையிடல் செயல்முறையின் மூலம் அடையாளம் காணப்பட்டன.

ஒவ்வொரு நிவாரணப் பொதியும் உலர் உணவுகள் மற்றும் சில சுகாதார மற்றும் மருத்துவ ரீதியான வீட்டுப் பொருட்களைக் கொண்டிருக்கும், அவை இந்தக் குடும்பங்களுக்கு உதவியாக இருக்கும். இந்த திட்டத்தால் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய குழுக்களில் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகள் (குறிப்பாக ஊட்டச்சத்து குறைபாடுகள் உள்ளவர்கள்), குறைபாடுகள் உள்ளவர்கள், ஒற்றை பெற்றோர் குடும்பங்கள்/பெண் தலைமைத்துவ குடும்பங்கள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், பெரிய குடும்பங்களில் அதிக எண்ணிகையிலான சார்ந்திருப்பவர்களை கொண்டவர்கள் வாழ்வாதாரம் இல்லாத குடும்பத் தலைவர்கள் மற்றும்; தினசரி தொழிலாளர்களை பெரிதும் நம்பியிருக்கும் குடும்பங்கள் உட்பட பல்வேறு தரப்பினரை இலக்காக கொண்டே இத்திட்டமானது வடிவமைக்கப்பட்டது.

# Dragons of Asia 2022 விருதுகள் வழங்கல் நிகழ்வில் வெள்ளி விருதை சுவீகரித்த செலான் வங்கி

அன்புடன் அரவணைக்கும் வங்கி செலான் வங்கி Dragons of Asia 2022 வினைத்திறனான சந்தைப்படுத்தல் விருதுகள் 2022 நிகழ்வில் வெள்ளி விருதை சுவீகரித்திருந்தது.

முகவர் நிறுவனங்கள் வாடிக்கையாளர்களால் ஆசிய பிராந்தியத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்த பெறுபேறுகள் அடிப்படையிலான சிறந்த சந்தைப்படுத்தல் தொடர்பாடல்களை தெரிவு செய்து கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொவிட்19 தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் சுய விழிப்புணர்வு மற்றும் தனிநபர் பொறுப்பு போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அமைந்திருந்தது. அதனூடாக சிறந்த திட்டம் தன்னார்வ சந்தைப்படுத்தல் அல்லது பொதுத் துறைக்கான திட்டம் என்பதன் கீழ் வெள்ளி விருதை சுவீகரிக்க செலான் வங்கிக்கு முடிந்தது. இந்தப் பிரிவில் விருதை வென்ற ஒரே வங்கியாக செலான் வங்கி காணப்பட்டது.

2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுப் பரவலின் மூன்றாம் அலைத் தாக்கம் மோசமாக காணப்பட்ட வேளையில் அன்புடன் அரவணைக்கும் வங்கி பொது மக்கள் மத்தியில் தாம் பாதுகாப்பாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் வைரஸைக் கட்டுப்படுத்துவதில் அதன் பங்களிப்பு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியமை தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தது.




# ஒருங்கிணைந்த அறிக்கையிடல் விசேடத்துவத்திற்காக DIMO நிறுவனத்திற்கு அங்கீகாரம்

2022 ஒருங்கிணைந்த அறிக்கையிடல் விருதுகள் விழாவில் ஒட்டுமொத்த தங்க விருதை பெற்ற DIMO குறித்த விருது வழங்கும் நிகழ்வில் 'ஐந்து சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கைகள்' இற்காக' ஒருங்கிணைந்த சிந்தனை' இற்ககாகவும் அதன் 2021/2022 ஆண்டு அறிக்கைக்கான 'சிறந்த சுருக்கமான ஒருங்கிணைந்த அறிக்கை' ஆகியவற்றுக்கான விசேட விருதுகளை நிறுவனம் பெற்றுள்ளது.





‘இலங்கை வாய்ப்புகள் நிறைந்தது’ எனும் தொனிப் பொருளை முன்னிலையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட DIMO நிறுவனத்தின் 2021 2022 வருடாந்த அறிக்கையானது DIMO குழுமத்தை எதிர்காலத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்புகளை பெறுவதை இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் ஒருங்கிணைந்த அறிக்கையிடலில் வெற்றி தொடர்பில் தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட DIMO நிறுவனத்தின் பணிப்பாளர் பிரதம நிதி அதிகாரி சுரேஷ் குணரத்ன “நிதி அறிக்கையிடலில் புத்தாக்கங்களைக் கொண்டுவருவதோடு ஒருங்கிணைந்த அறிக்கையிடல் கொள்கைகளுடன் இணங்கும் DIMO நிறுவனத்தின் அர்ப்பணிப்பானது வருடாந்த அறிக்கைகளுக்காக நாம் பெற்றுக் கொண்ட விருதுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு பொறுப்பான நிறுவனம் எனும் வகையில் எமது அனைத்து பங்குதாரர்களின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளை ஊக்குவிக்க எம்மால் முடிந்துள்ளது." என்றார்.

# இல்லங்களின் வரவேற்பறைக்குப் புதுப் பொலிவினைக் கொடுக்கும் Samsung Neo QLED 8K TV

Samsung Neo QLED 8K TV களை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதன் ஊடாக உங்கள் இல்லங்களில் நவீன பாணியில் நேர்த்தியான மற்றும் உங்கள் வாழ்க்கைத் தரத்தினை அடுத்த கட்டத்திற்கு இலகுவாக இட்டுச் செல்லப் போகிறது. நீங்கள் இன்று வரை அனுபவித்திராத பொழுதுபோக்குகளை வழங்கும் நோக்கோடு, அற்புதமான வடிவமைப்பு மற்றும் அதிநவீன அம்சங்களின் சேர்வைகளோடு, அவற்றை எதனோடும் ஒப்பிடமுடியாத வகைளில் நீங்கள் உங்கள் புருவத்தினையே உயர்த்தும் விதமாக, உங்களுக்காகவே இவ்வகை TV தயாரிக்கப்பட்டுள்ளது.

Samsung Neo QLED 8K TV ஆனது உங்கள் இல்லங்களில் எவ்வித தடையோ சிரமமோ இன்றி நவீன அலங்கரிப்போடு சிறந்த பொழுதுபோக்கை எப்படி அள்ளி வழங்கப்போகிறது என நீங்கள் யோசிப்பது எமக்குப்புரிகிறது.

Neo QLED 8K TV ஆனது மெல்லிய மற்றும் பளபளப்பான தோற்றத்தோடு தனிச் சிறப்புப் பண்பியல்பைக் கொண்டதாக இப்போது கிடைக்கப்பெறுகிறது. அதன் தனித்துவமான வடிவமைப்பானது, இந்த TV யில் வரக்கூடிய காட்சிகளாவன நீங்கள் தரை மீது மிதப்பது போன்ற தோற்றப்பாட்டினை உங்களுக்கும் உங்கள் விருந்தினர்களுக்கும் மகிழ்ச்சி நிறைந்த திகைப்பை உண்டாகும் விதமாக அள்ளி வழங்கப் போகிறது!

Samsung ன் அண்மை வெளியீடான Neo QLED 8K TV கள் Quantum Matrix Technology Pro வுடன் கிடைக்கப் பெறுகிறது, இது Quantum Mini LED களால் இயக்கப்படுகிறது. சாதாரண LED யின் 1/40 வது அளவுடன், Quantum Mini LED ஆனது சிறந்த வர்ணங்களோடு கூடிய பிரகாசம் மற்றும் அதன் வேளுறும் தன்மை குறைக்கப்பட்டும் கரியநிறம் அதிகரிக்கப்பட்டும் தற்போது கிடைக்கப்பெறுகிறது. Shape Adoptive Light Control ஆனது காட்சிகளில் தென்படக்கூடிய பல்வேறு பொருட்களைத் துல்லியமாக பகுப்பாய்வு செய்து, அதற்கேற்ப ஒளி வெளிப்பாட்டினைக் கட்டுப்படுத்துகிறது இதன் மூலமாக தடையற்ற காட்சி அனுபவத்தை வழங்குகிறது.







கொ/ சைவமங்கையர் வித்தியாலய 2021 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை வித்தியாலய கழக மண்டபத்தில் முகாமையாளர் செல்வி மாலா சபாரட்ணம், அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக சட்டமா அதிபர் சஞ்ஜய் இராஜரட்ணம், தர்மினி இராஜரட்ணம், சிறப்புவிருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.கே. நவரட்ணராஜா ஆகியோர் பங்கேற்றிருந்தனர். அத்துடன் சகலதுறை சாதனையாளர் விருதினை செல்வி. துரைசாமி ஹம்சாலினி பெற்றுக்கொண்டார்.

# மூன்று மூளைச்சாவு அடைந்தவர்களின் உடல் உறுப்புகளை விமானத்தில் கொண்டு செல்ல புரிந்துணர்வு ஒப்பந்தம்

விபத்து மற்றும் அனர்த்தங்களுக்குள்ளாகி மூளைச்சாவு அடைந்தவர்களின் உடல் உறுப்புகளை விமானத்தில் கொண்டு செல்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.



விபத்துகள் மற்றும் அனர்த்தங்களுக்குள்ளாகி அதன் காரணமாக மூளைச்சாவு அடைந்தவர்களின் உறுப்புகளை மற்றொரு நபருக்கு மாற்றுவதற்கான விமானப் போக்குவரத்து தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் பாதுகாப்பு அமைச்சின் பூரண அங்கீகாரத்துடன் இலங்கை விமானப் படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்தா ஆகியோர் கடந்த 2022 டிசம்பர் 21 ம் திகதி விமானப்படை தலைமையகத்தில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதனடிப்படையில் இங்கு முக்கியாக திடீர் விபத்துகள் மற்றும் அனர்த்தங்களுக்குள்ளாகி அதன் காரணமாக மூளைச்சாவு அடைந்தவர்களின் பாதுகாவலர்களின் வேண்டுகோளின் பிரகாரம் அவர்களின் முக்கிய உடலுறுப்புக்களை பெறுவதற்காக விமானம் மூலம் பாதுகாப்பாக கொண்டுசெல்லப்படுவர்.

சுகாதார அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தத்தின்படி, இலங்கை விமானப்படைக்கு சொந்தமான சி 130, அண்டனோ 32, எம்ஏ60, வை 12, எம்ஐ17, பெல்412, பெல்212 மற்றும் பெல்206 ஆகிய விமானங்கள் இந்த நோயாளிகள் மற்றும் அவர்களின் உறுப்புகள் கொண்டு செல்லப்பட பயன்படுத்தப்படும். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் இலங்கை விமானப்படை வான் செயற்பாட்டுப்பணிப்பளார் எயார் வைஸ் மார்ஷல் எதிரிசிங்க, விமானப்படை சட்ட பணிப்பாளர் எயார் கொமடோர் சுரேகா டயஸ், மற்றும் விமானப்படை அதிகாரிகள் , சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டொக்டர் சுனில் டி அல்விஸ்,சுகாதார சேவைகள் பணிப்பாளர், டாக்டர் அயந்தி கருணாரத்ன, பிரதம சட்ட அதிகாரி ஏ.ஆர்.அஹமட் மற்றும் வைத்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாட்டில் தமிழக சட்ட மன்ற உறுப்பினர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா MLA எழுதிய "நபிகளாரின் சமூக உறவு" நூல் வெளியீட்டு விழா ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் முன்னாள் தலைவர் என்.எம். அமீனின் தலைமையில் கொழும்பு தபாலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து சிறப்பித்த பிரதம அதிதி வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரிக்கு யாழ். எழுத்தாளர் கலாபூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் முன்னாள் தலைவர் என்.எம்.அமீன், நூலாசிரியர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா , ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா தலைவி புர்கான் பீ. இப்திகார், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தேசிய தலைவர் ரிஷாட் பதியுதீன், முஷான் இன்டர்னெஷனல் பிரதம நிறைவேற்று அதிகாரி அல்ஹாஜ் முஸ்லிம் சலாஹுத்தீன், கலாபூஷணம் நிலாம், காலைக்கதிர் பிரதம ஆசிரியர் என். வித்தியாதரன் ஆகியோர் அருகில் இருப்பதையும் காணலாம்.

# சோலைக்கிளியின் தண்ணீருக்கு எத்தனை கண்கள் நூல் வெளியீடு






சமர்ப்பணம் செய்யப்பட்ட இந் நூலின் முதன்மூன்று பிரதிகளும் அருட்தந்தை அன்பு ராசா, யூ.எல்.ஏ. அஸீஸ், ஜவாட் அப்துல் றசாக் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது. வெளியீட்டு உரையினை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் எஸ்.நவநீதன் நிகழ்த்தினார். சுருக்கமான 'சின்னச் சின்ன குச்சி மிட்டாய் உரைகள்' என்ற தலைப்பின் கீழ் சுருக்கமான சிற்றுரைகளும் அங்கு இடம் பெற்றன.

இந் நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் ரவூப் ஹக்கீம் பா.உ. அவர்கள், தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் றமீஸ் அபூபக்கர் , பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, எழுத்தாளர் உமா வரதராஜன், வைத்தியர் புஷ்பலதா லோகநாதன், பேராசிரியர் செ.யோகராசா, மன்சூர் ஏ.காதர் ஆகியோர் உட்பட ஏராளமான அரச நிர்வாக அலுவலர்களும், கலை இலக்கிய அபிமானிகளும் கலந்து சிறப்பித்தனர்.

நூலாசிரியர் கவிஞர் சோலைக்கிளி ஏற்புரையையும், நன்றியுரையையும் வழங்கினார்.




இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவையின் ஏற்பாட்டில் அண்மையில் நிறுவனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க வின் முன்னிலையில் நடைபெற்ற "மதுர கீதங்கள் இசை நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட படங்கள். நிலையத்தின் தலைவர் மற்றும் ஆலோசனை சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து மங்கள விளக்கு ஏற்றுவதையும் ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.





காலி களுவெல்ல வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் ஸ்ரீ சக்தி ஆன்மீக இந்து சம்மேளன அமைப்பின் ஏற்பாட்டில் குருசாமி எம். புஸ்பநாதன் தலைமையில் 10 ஆவது ஆண்டு ஐயப்பன் மண்டலபூஜை கடந்த 22ஆம் திகதி மிக பக்தி பூர்வமாக நடைபெற்றது. நிகழ்வில் மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் இருந்து முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர பாபுசர்மா குருக்கள் முன்னிலையில் ஊர்வலம் ஐயப்பன் ஆலயத்தை நோக்கி புறப்பட்டுச் செல்வதையும், அகில இலங்கை குரு சாமி ஒன்றியத்தின் மூத்த குருசாமி ரவீந்திரகுமார் சுப்பிரமணியம் குருசாமி தலைமையில் மண்டலாபிஷேக பூர்த்தி பூஜை நடைபெறுவதையும், சிறப்பதியாக கலந்து கொண்ட கலாநிதி பாபுசர்மா இராமச்சந்திர குருக்களுக்கு வாழ்த்து மடல் வழங்கி கௌரவிப்பதையும், கலந்து கொண்ட காலி மாநகர முதல்வர் பிரியந்த சகபந்து மற்றும் ஐயப்பன் பக்தர்களையும் காணலாம்.



அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் நூற்றாண்டு நிகழ்வு தொடர்பில் அதன் உயர்மட்டப் பிரதிநிதிகளான மௌலவி ஏ,எல்.எம்.கலீல், மௌலவி புர்ஹான் ஆகியோர் உள்ளிட்ட குழுவினர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை, கட்சியின் "தாருஸ் ஸலாம்" தலைமையகத்தில் அண்மையில் சந்தித்து கலந்துரையாடியபோது பிடிக்கப்பட்ட படம்.






# அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த சீன இராஜதந்திரிகள் குழு நியூயோர்க்குக்கு இரகசிய பயணம்

## சீன – அமெரிக்க அதிபர்கள் சந்திப்பின் பின்னர் புதிய நகர்வுகள்

சீன ஜனாதிபதியாக ஸீஜின்பிங் மூன்றாம் தடவையாகவும் பதவி நீடிப்பு பெற்ற பின்னர் சீன – அமெரிக்க உறவில் ஒரு புதிய பிணைப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அமெரிக்க – சீன இரு தரப்பு உறவுகள் தொடர்பில் புதிய அத்தியாயத்தை ஆரம்பிப்பது தொடர்பான இரகசிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் வகையில் சீன இராஜதந்திரக் குழுவொன்று நியூயோர்க் சென்றுள்ளதாகவும் ஹொங்கொங் போஸ்ட் இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பாலியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த சீன ஜனாதிபதியும் அமெரிக்க ஜனாதிபதியும் சந்தித்து பேசிய பின்னரேயே இக் குழுவின் விஜயம் ஏற்பாடாகியிருக்க வேண்டும் என ஹேஷ்யம் தெரிவித்திருக்கும் இப் பத்திரிகை, ஃபுதான் பல்கலைக்கழ சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தின் தலைவரான பேராசிரியர் வூஸின்போ இணைய தளமொன்றுக்கு அளித்துள்ள பேட்டியை ஆதாரம் காட்டியுள்ளது.

முன்னர் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இராஜதந்திர உறவுகள் ஏற்பட்டதும் ஒரே சீனா என்ற கொள்கையை அமெரிக்கா ஏற்றுக் கொண்டது. தற்போது தாய்வான் ஒரு சுதந்திர தனிநாடு என்று கூறி அதனுடனான உறவுகளை பலப்படுத்தி வருகிறது. அதாவது ஒரே சீனா ஒரே தாய்வான் என்ற கொள்கையை பின்பற்றுகிறது.

எனவே இவ்விரு நாடுகளும் தமது மூலோபாய நலன்களை கவனத்தில் கொண்டிருப்பதால் தாய்வான் சீனப் பெரு நிலத்துடன் இணைவதில் இந்நாடுகள் உண்மையான அக்கறை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. தாய்வானை மீள இணைத்துக் கொள்ளும் சீனக் கொள்கையின் மீது இராணுவ, பொருளாதார அழுத்தங்களை அமெரிக்கா பிரயோகிக்கும். எனவே தாய்வான் நீரிணையில் இருந்து இரு நாடுகளும் விலகியே இருக்கும் என்றே கருதப்படுகிறது என்று பேராசிரியர் வூஸின்போ தெரிவித்துள்ளார்.

வாங்சாவோ என்ற முன்னாள் சீன துணை அமைச்சர் தலைமையிலான இந்த ராஜதந்திரிகள் குழுவில் பல்துறைகளில் சிறந்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இக்குழுவை முன்னாள் அமெரிக்க உயர் அதிகாரியான மொரிஸ் கிறீன்பேர்க் நியூயோர்க்கில் வரவேற்று பேசியுள்ளார்.